பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# வலம்புரி

Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஆவணி 19 | வெள்ளிக்கிழமை | (05.09.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 260

## பரிஸுக்குச் சென்ற புலிகள் நேற்று தாயகம் திரும்பினர்

### தலைவர் பிரபாவுடன் முக்கிய சந்திப்பு

(கிளிநொச்சி)

அரசாங்கத்தின் இடைக்கால நிர்வாக சபை திட்டவரைபு குறித்து ஆராய்வதற்காக பிரான்ஸ் சென்றிருந்த விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவினர், நேற்று முற்பகல் 11 மணியளவில் கிளிநொச்சியை வந்தடைந்தனர்.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மட்டு அம்பாறை மாவட்டச் சிறப்புத் தளபதி கேணல் கருணா அம்மான், சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் மற்றும் உதவியாளர்கள் அனைவரும் நேற்று அதிகாலை 5மணிக்கு கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அங்கிருந்து அரச வான் படைக்கு சொந்தமான ஒரு ஹெலிகொப்டரில் தமிழ்ச்செல்வன் குழுவினர் வன்னிக்கு புறப்பட்டு வந்தனர். மற்றொரு ஹெலிகொப்டரில் கருணா அம்மான் மட்டக்களப்புக்குச் சென்றார்.

பிரான்சில் ஆராயப்பட்ட விடயங்கள் குறித்து விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபகரனை தமிழ்ச்செல்வன் நேற்று மாலை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இது தொடர்பான தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை. (இ-8.43)

## அரசு-புலிகள் தயாரித்துள்ள திட்ட வரைபில் பாரிய வேறுபாடு

### பேச்சுக்கள் தாமதமாகலாம்

(நமது நிருபர்)

விடுதலைப் புலிகளினால் பரிஸில் தயாரிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபை தொடர்பான திட்ட வரைபு அரசிடம் கையளிக்கப்பட்டாலும் அடுத்த கட்ட சமாதானப் பேச்சுவார்த்தை எப்போது ஆரம்பிக்கும் என்று திட்டவட்டமாக கூறமுடியாதிருப்பதாக அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அரசு, விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைத்த திட்ட வரைபுக்கும் விடுதலைப் புலிகள் தயாரித்துள்ள திட்ட வரைபுக்குமிடையே பாரிய வேறுபாடுகள் இருக்குமென எதிர் பார்க்கப்படுவதாலேயே சமாதானப் பேச்சுவார்த்தை மீண்டும் எப்போது ஆரம்பிக்கப்படும் என கூறமுடியாதுள்ளதாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

இதேவேளை அடுத்த கட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஐரோப்பிய நாடு ஒன்றில் நடைபெறலாம் என்றும் இந் நாடு இத்தாலியாகவோ சுவிஸ்லாந்தாகவோ இருக்கலாம் என்றும் அரசின் முக்கிய அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ம)

# புலிகளின் திட்ட வரைபை அரசு ஆவலோடு எதிர்பார்க்கிறது

## அமைச்சர் பீரிஸ் அறிவிப்பு

(நமது நிருபர்)

**தேக்கநிலை அடைந்துள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக சபை தொடர்பான திட்ட வரைபை அரசாங்கம் மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்திருப்பதாக அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்**

அமைச்சரவையின் முடிபுகளை அறிவிக்கும் வாராந்தப் பத்திரிகையாளர்கள் மாநாட்டிலேயே அமைச்சரவைப் பேச்சாளரும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அரச தரப்பில் தலைமை தாங்குபவருமான அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு அரசின் ஆவலை வெளிப்படுத்தினார்.

கொழும்புத் தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இச் செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் முன்னெடுத்துச் செல்வதற்காக நோர்வேயிலிருந்தும் யப்பானில் இருந்தும் விசேட பிரதிநிதிகள் கொழும்புக்கு வரவுள்ளார்கள்.

கொழும்புக்கு வருகை தரவுள்ள இப் பிரதிநிதிகள் அரச தரப்பு பிரதிநிதிகளுடனும் புலிகளின் பிரதிநிதிகளுடனும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவர். இந் நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்ததும் முக்கியமாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக அரசாங்கம் தற்போது பரீசீலித்து வருகிறது.

**யசூஸி அகாஸி வருகிறார்**

ரோக்கியோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் வழங்கப்பட்ட நிதிகள் தற்போது கிடைத்து வருகிறது. இந் நிதியினை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்குரிய வழிவகைகளை ஆராய்வதற்காக யப்பானின் விசேட தூதுவர் யசூஸி அகாஸி எதிர்வரும் 11ம் திகதி வியாழக்கிழமை இலங்கைக்கு வரவுள்ளார். இவரது தலைமையில் 12ம் திகதி கொழும்பில் விசேட மாநாடு ஒன்றும் நடைபெறவுள்ளது. இம் மாநாட்டில் இலங்கைக்கு நன்கொடை வழங்கும் நாடுகளின்

(10ம் பக்கம் பார்க்க)



## இளம்குடும்பப் பெண் மீது சிப்பாய் பலாத்கார முயற்சி

### மணற் காட்டுப் பகுதியில் சம்பவம்

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப் பகுதியில் இளம்குடும்பப் பெண் ஒருவரை கடற்படை சிப்பாய் ஒருவர் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்த முயன்றுள்ளார்.

கடந்த செவ்வாய்க் கிழமை இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அன்றைய தினம் நள்ளிரவு வேளை கடற்படை முகாமிற்கு அருகிலுள்ள வீட்டினுள் புகுந்த பிரஸ்தாப சிப்பாய் உறக்கத்திலிருந்த குடும்பப் பெண் மீது

(10ம் பக்கம் பார்க்க)

## வவு.பெண்கள் சங்கமம் நிகழ்வு

## புலிக்கொடி ஏற்றுவதற்கு கண்காணிப்புக்குழு தடை

### வாக்குவாதத்தின் மத்தியில் கொடி ஏற்றப்பட்டது

(வவுனியா)

வவுனியாவில் நேற்று ஆரம்பமான விடுதலைப் புலிகளின் பெண்கள் சங்கமம் நிகழ்வில் புலிக்கொடி ஏற்றுவதற்கு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தடைவிதித்திருந்த போதும் புலிக்கொடி ஏற்றியே நிகழ்வு ஆரம்பமாகியது.

இதனால் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு வினருக்கும் விழா ஏற்பாட்டாளர்களுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது.

இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்திலும் அரச கட்டடங்களிலும் புலிக்கொடி ஏற்றுவது ஒப்பந்தத்திற்கு முரணானது எனவும் அதனை மீறி செயற்பட்டால் அது ஒப்பந்த மீறலாகவே பதிவு செய்யப்படும் எனவும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்திருந்தனர்.

எமது பிரதேசத்தில் எமது கொடியை ஏற்றியே நாம் நிகழ்வை ஆரம்பிப்பது வழமை இது எந்த வகையிலும் முரணான செயற்பாடு அல்ல என விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இம் முரண்பாடுகளுடன் நகர சபை முன்றலில் மு.ப.10.30 மணியளவில் பெண்கள் சங்கம நிகழ்வு ஆரம்பமாகியது. விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி தேசியக் கொடியினை ஏற்றினார். மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் ஈகச்சுடரை ஏற்றி வைத்தார்.

ஐந்நூறுக்கும் மேற்பட்ட மகளிர் அமைப்புக்கள் பங்கு பற்றிய இந் நிகழ்வில் பெண்கள் எதிர்நோக்கும் சமூக, பொருளாதார பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டது. (இ)

## கொழும்புத்துறைப் பகுதியில் பதுங்குகுழி அமைக்கும் படையினர்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறைக் கடற்கரையோரப் பகுதிகளில் படையினர் புதிதாகப் பதுங்கு குழிகளை அமைத்து வருகின்றனர்

மேற்படி பகுதியில் உடைந்த வீடுகளை கவச வாகனங்களால் தரைமட்டமாக்கி புதிதாக பதுங்கு குழிகளை படையினர் அமைத்து வருவதாகக் கூறப்படுகிறது.

அதேவேளை மேற்படி கடற்பகுதியில் கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்கள் மீதான பாஸ் நடைமுறைகளும் சோதனை நடவடிக்கைகளும் இறுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-51)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

வடமராட்சி வடக்கு இறங்குதுறைப் புனரமைப்பில் இழுபறி

# இணக்கமான தீர்வைப் பெற்றுத்தர யாழ்.அரச அதிபரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்கில் உள்ள இறங்குதுறைகளைப் புனரமைக்கும விடயத்தில் இணக்கமானதோர் தீர்வினைப் பெற்றுத் தருமாறு வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்கள் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடமராட்சி வடக்கில் இயங்கும் 20 கடற்றொழிலாளர் சங்கங்களுக்கும் உள்ள இறங்குதுறைகளையும் புனரமைக்கப்பட்ட தலா 5 இலட்சப்படி நிதி உதவியளிப்பதாக நிக்கொட் நிறுவனம் உறுதி மொழியளித்திருந்தது.

இதற்கமைய மாரிகாலத்திற்கு முன்பாக மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்படும் இந்த இறங்குதுறையைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்த நிலையில் ஐந்து இறங்கு துறைகள் மட்டுமே புனரமைப்பதற்கு வேண்டிய 25 இலட்சத்தை, நிக்கொட் நிறுவனம் தற்போது ஒதுக்கியுள்ளது.

இதனையடுத்து, சேதமடைந்துள்ள நிலையில் இருக்கின்ற இறங்கு துறைகளில் முன்னுரிமை அடிப்படையில் எவற்றைத் தெரிவு செய்து புனரமைப்பது என்ற சிக்கல் எழுந்துள்ளது.

அத்துடன் முன்பின்னாகப் புனரமைக்கப்படும் பட்சத்தில் மீனவர்கள் சங்கங்களிடையே வீணான முரண்பாடுகளும் தோன்றக் கூடும் என அஞ்சப்படுகிறது.

ஒதுக்கப்பட்ட நிதியைக் கொண்டு 20 இறங்கு துறைகளின் ஆரம்பிக்கப்பட்ட புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கும் நிக்கொட் திட்ட பொறியியலாளர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இது விடயத்தை சுமுகமாகத் தீர்க்கும் பொருட்டு யாழ்.அரச அதிபரை நாடிய வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச செயலாளர் க.சூரியகுமார் தலைமையிலான குழுவே மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளது.

(உ-4)

## அரசிறை அதிகார சபை அடுத்த ஆண்டு ஸ்தாபகம்

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் மாதத்தில் அரசிறை அதிகாரசபை ஸ்தாபிக்கப்படும் என நிதி அமைச்சர் கே.என். சொக்ஸி தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில், உள்நாட்டு அரசிறைகள் திணைக்களம், சுங்கத் திணைக்களம் கலால் திணைக்களம் என்பதனை இணைப்பதன் மூலம் இந்த அதிகார சபை உருவாக்கப்படும்.

இத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிராக ஆட்சேபங்கள் எழுந்தாலும் அதிகார சபைக்கான பிரதம நிறைவேற்று அதிகாரியை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் விரைவில் கோரப்படவுள்ளன.

அரசாங்கத்தின் வருடாந்த வருமானத்தில் 90 சத வீதம் மேற்படி மூன்று திணைக்களங்களில் இருந்தே கிடைக்கின்றது.

எனவே, இத் திணைக்கங்கள் மூன்றையும் இணைத்து அரசிறை அதிகார சபையொன்றை அமைப்பதன் மூலம் வரி வசூலிப்பு போன்ற நடவடிக்கைகளை மேலும் திட்டமிட்ட வகையில் மேற்கொள்ள முடியும் என்று தெரிவித்துள்ளார்.

(உ-10)

## பொற்பதிக் கிராமப் பாடசாலையில் கற்பிக்க ஆசிரியர் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு பொற்பதி கிராமத்தில் உள்ள ஒரே ஒரு பாடசாலையும் சீரான முறையில் இயங்காத காரணத்தால் அப் பகுதியிலுள்ள 200க்கும் மேற்பட்ட மாணவர்களின் கல்வி நிலை வெகுவாகப் பாதிப்படைந்துள்ளது.

கடந்த கால யுத்த அனர்த்தங்களாலும் இராணுவ ஆக்கிரமிப்பாலும் கட்டடங்கள் மற்றும் தளபாடங்கள் ஆகியன பெரும் சேதத்திற்குள்ளான நிலையில் மேற்படி பொற்பதி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை பல்வேறு சிரமத்தின் மத்தியிலும் தரம் 1 தொடக்கம் தரம் 8 வரையான வகுப்புகள் நடத்தப்பட்டு வந்தன.

இருந்த போதிலும், இப் பாடசாலையில் 8 ஆசிரியர்கள் மாத்திரம் கல்வி போதித்துவருகின்றனர். போக்குவரத்துச் சிரமங்கள் மற்றும் இராணுவ கெடுபிடிகள் ஆகியவற்றால் மிகக் குறைந்தளவில் கடமையாற்றி வந்த ஆசிரியர்களின் வரவும் தற்போது குறைவடைந்து வருகிறது.

அத்துடன், இப் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களும், கல்வி கற்கும் பெண் பிள்ளைகளும் இராணுவத்தின் கெடுபிடிகளுக்கு அஞ்சி பாடசாலைக்குச் செல்லாமல் வீடுகளிலேயே முடங்கிக் கிடக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாக அப் பகுதி மக்கள் பெரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

(உ-4)

## சாகித்திய விருதுபெறும் தமிழ் நூல்கள் அறிவிப்பு

(கொழும்பு)

கடந்த வருடம் இலங்கையில் வெளியான, சாகித்ய விருதுக்கு தெரிவு செய்யப்பட்ட தமிழ் நூல்களின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன.

கவிதை

மருதூர்கனி - அந்த மழை நாட்களுக்காக

சிறுகதைத் தொகுதி

செம்பியன்செல்வன் - சர்ப்ப வியூகம்

நாவல்

தெணியான் - கானலின் மான்

சிறுவர் இலக்கியம்

முத்து இராதாகிருஸ்ணன் - சிறுவர் அரங்கு

பல்துறை நூல்

கலாநிதி பரமு புஸ்பரத்தினம் - தொல்லியல் நோக்கில் ஈழத் தமிழரின் பண்டையகால மதமும் கலையும்

ஆய்வு நூல்

எஸ்.ஏ.பாலேந்திரா - காரைநகர் தொன்மையும் வான்மையும்

மொழிபெயர்ப்பு நூல்

எஸ்எம்ஏ.அமீன் - அண்ட வெளியினிலே அதிசய யாத்திரை

இந்த விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 18ம் திகதி வியாழக்கிழமை பி.ப.4.30மணிக்கு கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் கல்வியமைச்சர் கருணாசேனா கொடித்துவக்கு தலைமையில் நடைபெறவுள்ளது.

மின்சக்தி எரிபொருள் துறை அமைச்சர் கரு ஜெயசூரிய நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்கேற்கவுள்ளார்.

இதேவேளை இலக்கிய உலகிற்கு ஆற்றிய சேவைக்காக கலாநிதி கே.சொக்கலிங்கத்திற்கு சாகித்திய ரத்னா விருது வழங்கப்படவுள்ளது.

(உ-8)

## திரும்பிச் செல்லும் நிதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திறந்த பல்கலைக் கழகத்துக்கு புதிய கட்டடம் அமைப்பதற்கென அரசினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட 5 கோடி 55 லட்சம் ரூபா நிதி, பயன்படுத்தப்படாத நிலையில் திரும்பிச் செல்லக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது.


இப்பல்கலைக் கழகத்தின் பெயரில் இதுவரையும் காணியற்ற நிலை இருப்பதன் காரணமாகவே, புதிய கட்டடம் அமைக்கப்படுவதற்கான வாய்ப்புகள் இல்லாமல் போயுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.


யாழ்ப்பாணம் திறந்த பல்கலைக் கழகம் ஆரம்ப காலம் முதல் யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியிலேயே இயங்கி வருவது தெரிந்ததே.

இப்பல்கலைக்கழகத்துக்கு என புதிய கட்டடம் அமைப்பதற்கு புதிய இடம் எதுவும் இதுவரை தெரிவு செய்யப்படாமல் இருந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

(உ-16-43)







நேற்றைய தினம் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற விழிப்புணர்வுக் கருத்தரங்கில் யாழ்.மாநகரசபை ஆணையாளர் இ.இராமலிங்கம் உரையாற்றுவதையும் நிகழ்வில் பங்கேற்றவர்களின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.
படங்கள் : ஜெராட்

## இளைஞர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

புளியங்குளத்தில் கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி செல்வா நகரைச் சேர்ந்த மகாலிங்கம் தயாரூபன் (வயது 23) என்ற இளைஞரே காலில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த)

## உழவுயந்திரம் மோதி மாணவன் காயம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்த போது உழவுயந்திரம் மோதியதில் மாணவன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் தரம் 8ல் கல்வி பயிலும் கொழும்புத்துறையைச் சேர்ந்த தேவதாஸ் ஜீவதாஸ் (வயது 13) என்ற மாணவனே படுகாயமடைந்தவராவார். (த)

## ஆசிரியர் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

6,7,8 ஆம் தரங்களுக்கு வரலாறும் சமூகக்கல்வியும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு ஒன்று இன்று 5 ஆம் திகதி முதல் 7ஆம் திகதி வரையான மூன்று தினங்கள் மு.ப 9.00 மணி முதல் பி.ப 4.00மணிவரை இடம பெறவுள்ளது.

யாழ்.கோட்டப் பாடசாலை ஆசிரியர்களுக்கு யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலும், நல்லூர் கோட்டப் பாடசாலை ஆசிரியர்களுக்கு யாழ். வலயக் கல்வி அலுவலகத்திலும், கோப்பாய் கோட்டப் பாடசாலை ஆசிரியர்களுக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் இச் செயலமர்வு இடம் பெறவுள்ளது. (உ-7)

## இலவச வகுப்பு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப் புலவர் தேர்வுக்கான இலவச வகுப்பு எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வண்ணை நாவலர் மகாவித்தியாலத்தில் ஆரம்பமாகும் எனவும் இணைய விரும்புவோர் அன்றைய தினம் மு.ப.10 மணிக்கு மேற்படி வித்தியாலத்தில் தமது பெயர்களை பதிவு செய்யலாம் எனவும் சைவ பரிபாலன சபைத் தேர்வுச் செயலர் வ.கந்தசாமி தெரிவித்துள்ளார். (உ-8)

## காய்ச்சலால் இளைஞன் மரணம்

(யாழ்ப்பாணம்)

காய்ச்சல் காரணமாக யாழ்போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட இளைஞர் ஒருவர் சிகிச்சை பயனளிக்காது கடந்த செவ்வாயன்று மாலை உயிரிழந்துள்ளார்.

நாரந்தனை தெற்கைச் சேர்ந்த திவ்வியநாதன் திவ்வியராசா (வயது-20) என்ற இளைஞனே பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பிரஸ்தாப இளைஞன் மூளை மலேரியா காரணமாக உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(த)

## கொமர்ஷல் வங்கி சுன்னாகக் கிளை திறப்பு

(யாழ்ப்பாணம்)

கொமர்ஷல் வங்கியின் சுன்னாகக் கிளை எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.13 மணிக்கு இல.87, காங்கேசன்துறை வீதி சுன்னாகம் என்ற முகவரியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

(உ-103)

## தலைமைத்துவ செயலமர்வு

(கந்தரோடை)

சங்கானை, சண்டிலிப்பாய் கோட்டப் பாடசாலைகளில் தரம் 12,13 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கான தலைமைத்துவ செயலமர்வு யா/மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

காலை 8.30 மணிமுதல் பி.ப. 4.30 மணிவரை இடம்பெறவுள்ள மேற்படிச் செயலமர்வானது சங்கானைக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கு இன்று வெள்ளிக்கிழமையும், சண்டிலிப்பாய் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கு நாளை சனிக்கிழமையும் இடம் பெறும் என உடுவில் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(உ-103)

## தமிழ் மொழிமூல ஆசிரியர் 175 பேர் நியமனம்

(கொழும்பு)

சப்பிரமுவா மாகாணத்தில் புதிதாக 275 ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் பிறேமதாஸ கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

தோட்டப்பகுதிகளில் க.பொ.த.(உ/த) பரீட்சையில் சித்தி அடைந்த 175 தமிழ்மொழிமூல ஆசிரியர்களும் 95 பட்டதாரி ஆசிரியர்களும் இதில் அடங்குகின்றனர்.

பட்டதாரி ஆசிரியர்களில் சிங்கள மொழிமூலப் பட்டதாரி ஆசிரியர்கள் 65 பேரும், தமிழ் மொழிமூலப் பட்டதாரி ஆசிரியர்கள் 20 பேரும், ஆங்கில மொழிமூலப் பட்டதாரி ஆசிரியர்கள் 10 பேரும் அடங்குவர்.

மாகாண அமைச்சின் வேண்டுகோளுக்கு இணங்க,இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு சமர்ப்பித்துள்ளார். (தி)

## கொடியேற்றம்

(வேலணை)

வேலணை வடக்கு இலந்தைவனம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 30 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது. எதிர்வரும் 8ம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது.

(உ-47)

## வருடாந்த உற்சவம்

(சில்லாலை)

வடலியடைப்பு புதறானை- ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த உற்சவம் கடந்த 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இவ் ஆலயத்தில் இடம்பெறவுள்ளன. (உ-58)

## ஸ்கந்தா வென்றது

(கந்தரோடை)

உடுவில் கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி கடந்த 3ஆம் திகதி கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போது, 16வயதுக்குட்பட்ட பிரிவில இணுவில் மத்திய கல்லூரியை எதிர்த்து விளையாடிய கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை 3:1 என்ற கோல்க்கணக்கில் வெற்றி பெறறது.

அதேபிரிவில்,மயிலணி சைவ மகா வித்தியாலயத்தை எதிர்த்து விளையாடிய ஸ்கந்தவரோதய கல்லூரி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

அத்துடன்,14வயதுக்குட்பட்ட பிரிவில் குப்பிளான் விக்கினேஸ்வரா மகாவித்தியாலயத்தை எதிர்த்து விளையாடிய ஸ்கந்தவரோதய கல்லூரி 2:0என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (உ-103)

## நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

கடந்த 31ஆம் திகதி இடம்பெற்ற யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கப்பொதுக் கூட்டத்தின் போது புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

சங்கத்தின் புதிய தலைவராக இ.பேரின்பநாயகமும்,உபதலைவராக சி.சுந்தரலிங்கமும், செயலாளராக கு.காந்தரட்ணமும்,உபசெயலாளராக இ.அமரசேனாபதியும்,பரிசோதகராக அ.செகராஜசிங்கமும் ஏகமனதாகத் தெரிவாகினர். (உ-18)

* * *

(கந்தரோடை)

கடந்த 27ஆம் திகதி இடம்பெற்ற சுன்னாகம் வர்த்தக சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் சங்கத்தின் புதிய தலைவராக இ.செல்வரவீந்திரராசாவும் செயலாளராக சி.செல்வசீலனும்,பொருளாளராக இ.ரவீந்திரகுமாரும் மற்றும் 12நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (உ-103)

## கும்பாபிஷேகம்

(கந்தரோடை)

அளவெட்டி அருவம்பற்று ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகம் எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட் கிழமை நடைபெறவுள்ளது. (உ-103)

# சமாதானத்தைக் குழப்பும் இனவாதிகளுக்கு எதிராகப் பிரசாரம் செய்யவேண்டும்

## சந்திரசேகரன் உடனான சந்திப்பில் விடார் வலியுறுத்து

(ஒஸ்லோ)

பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் உயிர்த்தியாகம் செய்யவும், கோடிக்கணக்கான சொத்துக்களை அழிக்கவும் காரணமான யுத்தம் மீண்டும ஏற்படாமல் இருக்க நோர்வே அரசு முழுமையான பங்களிப்பைச் செலுத்தவேண்டும் என அமைச்சர் சந்திரசேகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசன் அண்மையில் ஒஸ்லோவில் சந்தித்த போதே மேற்படி வேண்டுகோளை அமைச்சர் சந்திரசேகரன் விடுத்துள்ளார்.

காணி அதிகாரம் அதியுயர் பாதுகாப்பு வலயம் நீக்கப்படுதல், உள்ளக பாதுகாப்பு அதிகாரம் ஆகியவற்றைப் பற்றிய தெளிவான நிலைப்பாடு அமைவது மட்டுமே இடைக்கால நிர்வாக அமைப்பைச் சாத்தியமாக்கும் என்பதைத் தெளிவுபடுத்திய அமைச்சர், ஐரோப்பிய நாடுகளில் அகதிகளாகப் புலம்பெயர்ந்தவர்களை நிரந்தர சமாதானம் ஏற்படும்வரை திருப்பி அனுப்பக்கூடாது என்பதோடு, டோக்கியோ மாநாட்டில் நிதி வழங்கும் நாடுகள் வழங்குவதாகத் தெரிவித்துள்ள நிதியுதவியில் பிற்படுத்தப்பட்டுள்ள மலையக சமூகத்தின் அபிவிருத்திக்கும் கணிசமான தொகை வழங்கப்பட வேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என வலியுறுத்தினார்.

அத்துடன், மலையக மக்களின் கல்வி, சுகாதாரம், சுயதொழில் மற்றும் தொழிற்பயிற்சிக்கான விசேட நிதியுதவி, நோர்வே அரசாங்கத்தினால் சமூக அபிவிருத்தி அமைச்சிற்கு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த விடார் ஹெல்கிஸன் இத்தகவலைச் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவதாகவும், இவற்றை நடைமுறைப்படுத்த விசேட கவனம் செலுத்தப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தையைக குழப்பியடிக்கும் இனவாத அமைப்புகளின் நடவடிக்கைகளுக்குப் பரந்த அளவில் மாற்றுப் பிரசாரத்தை மேற்கொள்ளவேண்டியதன் அவசியத்தைத் தான் புரிந்துகொண்டதாகவும் மேலும் தெரிவித்துள்ளார். (உ)



# தெல்லிப்பழைக் கோட்டத்தில் உதைபந்தாட்டப் போட்டி

(கந்தரோடை)

தெல்லிப்பழைக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்று வரும் உதைபந்தாட்டப் போட்டிகள் நாளை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

யாழ். அருணோதயக் கல்லூரி, யாழ். மகாஜனக் கல்லூரி மைதானங்களில் மோதவுள்ள அணிகளின் விபரம் முறையே,

**14 வயதின் கீழ்ப் பிரிவு**

யாழ். குளமங்கால் ஆர்.சி. வித்தி. எதிர் யாழ். அளவெட்டி அருணாசலம் வித்தி.

யாழ். அருணோதயாக கல்லூரி எதிர் யாழ். மல்லாகம் மகா வித்தி.

**16 வயதின் கீழ்ப்பிரிவு**

யாழ். அருணாசலம் வித்தி. எதிர் யாழ். இளவாலை மெய்கண்டான் வித்தி.

யாழ். யூனியன் கல்லூரி எதிர் யாழ். மல்லாகம் மகா வித்தி.

**18 வயதின் கீழ்ப்பிரிவு**

யாழ். குளமங்கால் ஆர்.சி.வித்தி எதிர் யாழ். இளவாலை மெய்கண்டான் வித்தி, யாழ். அருணோதயக் கல்லூரி எதிர் யாழ். மகாஜனக் கல்லூரி. (உ-103,83)

# அஞ்சல் துறையின் விருத்தியால் உலகம் சுருங்கி விட்டது

### யாழ். மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் உரை

(யாழ்ப்பாணம்)

அஞ்சல் துறையின் விருத்தியால் உலகம் சுருங்கி விட்டது. உலக மக்களிடையே நெருக்கமான உறவுகள் வளரத் தொடங்கியுள்ளன என்று யாழ். மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் சிவராஜசிங்கம் தெரிவித்தார்.

மல்லாகம் மகாவித்தியாலயத்தில் அதிபர் மா.நாகேந்திரசீலன் தலைமையில் அண்மையில் நடைபெற்ற உலக அஞ்சல்தின விழாவில் உரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு அத்தியட்சகர் த.சிவராஜசிங்கம் தெரிவித்தார்.

மேலும் தொடர்கையில் அஞ்சல் சேவை, மக்களுடன் நெருக்கமான ஒரு சேவை அதன்மூலம் முத்திரை சேமித்துக் கடிதம் பரிமாற்றம் என்பவற்றைப்பெறமுடியும் என்றார்.

மல்லாகம் உப தபாலதிபர் திருமதி பு.குகேந்திரன் இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார். (உ)


# மிதிவெடி அபாயக் கல்வி வாரம் - யாழ். மாவட்டம்

## செப்ரெம்பர் 1 தொடக்கம் செப்ரெம்பர் -7 வரை

மீளக்குடியமர அல்லது தொழில் நிமித்தம் புதிய இடத்திற்குச் செல்லும்போது அவ்விடம் ஆபத்தானதா என அவ்வூர் வாசிகளிடம் கேட்டு அறிந்து கொள்வோம்.

ஆபத்தான பிரதேசங்களை தவிர்த்து நடப்போம்.

### ஆபத்தான பிரதேசங்களாவன,

### கைவிடப்பட்ட

- இராணுவ மண் அரண்கள் (பண்ட்)
- பதுங்கு குழிகள்
- வயல் நிலங்கள்
- காவல் நிலைகள்
- வீடுகள்
- இராணுவ எச்சங்கள் உள்ள இடங்கள்

மிதிவெடி அபாய எச்சரிக்கைப் பலகை போடப்பட்ட இடங்கள்

முள்ளுக் கம்பிச் சுருள் உள்ள இடங்கள்






### ஆபத்து நிறைந்த பூமியில் அவதானமாக நடப்போம்

மாவட்ட மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(C/6601)

# ஈராக்கின் கட்டுப்பாட்டு அதிகாரத்தை சர்வதேச அமைதிப்படை கையேற்றது

## அமெரிக்க இராணுவம் வெளியேறும்?

(பக்தாத்)

அமெரிக்க இராணுவம் மத்திய ஈராக்கின் கட்டுப்பாட்டு அதிகாரத்தை சர்வதேச அமைதிகாக்கும் படையிடம் நேற்று ஒப்படைத்தது.

ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படையினரை வாபஸ் பெறும் நட்வடிக்கையின் முதற்கட்டமாகவே இந்த அதிகாரக் கையளிப்பு நிகழ்ந்துள்ளது.

இது தொடர்பான விசேட வைபவம் புராதன நகரமான பாபிலோனில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஈராக்கின் கட்டுப்பாட்டு அதிகாரங்களைப் பொறுப்பேற்கும் 21 நாடுகளும அதன் கடமைகளைச் சிறந்த முறையில் நிறைவேற்றும் என்பதை முற்றாக நம்புவதாக அமெரிக்க இராணுவக் கட்டளை அதிகாரி நிக்கோடா சாஞ்சஸ் இந்த வைபவத்தின்போது தெரிவித்தார்.

இதேவேளை, அமெரிக்க இராணுவம் மேலும் சில மாதங்களுக்கு ஈராக்கின் தென் மத்தியவலயப் பகுதியில் நிலை கொண்டிருக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (பி-2)

## பாகிஸ்தான் மேலும் 269 மீனவர்களை விடுவிக்கவுள்ளது

(புதுடில்லி)

தடுத்து வைக்கப்பட்டுள்ள 269 இந்திய மீனவர்களை பாகிஸ்தான் விடுவிக்கவுள்ளது.

இம் மீனவர்களை விடுவிப்பதையடுத்து. இவர்களுடன் தடுத்து வைக்கபப்பட்டு விடுவிக்கப்படாத ஏனைய 74 மீனவர்களும் பின்னர் விடுவிக்கப்படுவார்களென பாகிஸ்தான் அறிவித்துள்ளது.இவர்களை இந்தியாவிற்கு அழைத்து வருவதற்கான ஏற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இந்திய மீனவர் குழுவொன்று பாகிஸ்தான் சென்றுள்ளது. (பி-2)

## ஈராக்கில் ஐ.நா.பணிகளை தீவிரமாக்க யு.எஸ். தீர்மானம்

### இந்தியா, பிரான்ஸ் படைகளைத் தருவிக்கவும் முயற்சி

(வாஷிங்டன்)

ஈராக்கில் ஐ.நா.வின் பணி குறித்த முக்கிய தீர்மானத்தை பாதுகாப்புச் சபையில் வாஷிங்டன் சமர்ப்புக்கும் என அமரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின்பவல் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ், துருக்கி,இந்தியா போன்ற நாடுகளில் இருந்து படைகளை ஈராக்கிற்கு அனுப்ப ஐ.நா பாதுகாப்பு சபைக்கு இத் தீர்மானம் அதிகாரம் வழங்கும்.

ஈராக்கில் அரசியல் சாசனத்தை தயாரிக்கவும், சுயாட்சியான தேர்தலை நடத்தவும் ஒரு திட்டம் மற்றும் கால அட்டவனையை சமர்ப்பிக்குமாறு ஈராக்கின் ஆளும்சபையை இத்தீர்மானம் கேட்டுக்கொள்ளும்.

ஈராக்கின் ஆக்கிரமிப்பு படைகளும் சர்வதேச ஆதரவைதிரட்ட வேண்டும் என அமெரிக்க நாடாளுமன்றத்தின் முக்கிய உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டதை அடுத்து இந்த உ்த்தேச தீர்மானம் கொண்டுவரப்படுகிறது. (பி-2)

## சர்வதேச வர்த்தக சமூகத்தை புதிய உடன்பாட்டுக்கு அழைக்கிறார் அதிபர் புஷ்

(வாஷிங்டன்)

புதிய வர்த்தக உடன்படிக்கை ஒன்றினை சர்வதேச வர்த்தக சமூகம் ஏற்படுத்தவேண்டும் என அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் கேட்டுக்கொண்டுள்ளார்.

மெக்ஸிக்கோவில் அடுத்தவாரம் நடைபெறவுள்ள சர்வதேச வர்த்தகப் பேச்சுவார்த்தைகளின்போது, புதிய வர்த்தக உடன்படிக்கையொன்றை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அத்தோடு, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு உதவும் முகமாக மேற்கொள்ளப்பட்ட சர்வதேச வர்த்தக உடன்படிக்கை அடுத்த ஆண்டு இறுதியில் பூர்த்தியடைவதனால், புதிய உடன்படிக்கை உருவாக்கப்படவேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனிடையே அமெரிக்காவின் புதிய சுதந்திர வர்த்தகத்திட்டத்தின் கீழ் சிங்கப்பூர், சிலி ஆகிய நாடுகளுடனான வர்த்தக உடன்படிக்கையில் கைச்சாத்திடும் வைபவம் வெள்ளை மாளிகையில் அணமையில் இடம் பெற்றுள்ளது.(பி-2)

## போர்த்துக்கலில் உஷ்ணத்திற்கு இதுவரை 316 பேர் பலி

(லிஸ்பன்)

போர்த்துக்கலில் கடந்த ஒகஸ்ட் மாதம் முதல் நிலவி வருகின்ற உஷ்ண காலநிலை காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 316 ஆக அதிகரித்துள்ளது.

அந்நாட்டின் சுகாதார அமைச்சின் திணைக்களம் ஒன்று நடத்திய ஆய்வின் மூலம் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் உயிரிழந்தவர்களில் சிலரே அதிக உஷ்ணத்தின் நேரடித் தாக்கத்தினால் உயிரிழந்தனர் என்றும், ஏனையவர்கள் உஷ்ணத்தினால் ஏறபட்ட நோய் காரணமாகவே உயிரிழந்தனர் என்றும் இந்த ஆய்வின் மூலம் மேலும் தெரியவந்துள்ளது. (பி-2)

## அதிசக்திவாய்ந்த ஜெற்விமானம் பாக். சீன கூட்டுத்தயாரிப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானும் சீனாவும் இணைந்து தயாரித்துள்ள புதிய போர் ஜெற்விமானம் சோதிக்கப்பட்டது.

எல்லா தட்பவெப்ப நிலையிலும் பறக்கக்கூடிய பல்திறன் வாய்ந்த இந்த ஜெற் விமானம் தலைசிறந்த சக்தியும், பறக்கும் திறனும் கொண்டது என்று சீனத் தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

கண்டத்தை எட்டிய தொலைவிற்கு அப்பாலுள்ள கப்பலைத் தாக்கும் ஏவுகணைகளை தாங்கிச் செல்லககூடியது இந்தக் குறுந்தொலைவு ஜெற்விமானம் என அதன் தயாரிப்பாளர்கள் கூறியுள்ளனர். (பி-9)

## உ.பி.புதிய அரசைப் போன்று பொடா சட்ட வழக்குகளை தமிழக அரசும் வாபஸ் பெறலாம்

### வை.கோ.எதிர்பார்ப்பு

(புதுடில்லி)

பொடா வழக்குகளை வாபஸ் பெறும் அதிகாரம் மாநில அரசாங்கத்திற்கு இருப்பதாக மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் வை.கோபாலசாமி கூறியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசிய குற்றச்சாட்டின் பேரில் பொடா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருக்கும் வை.கோபாலசாமி நேற்று முன்தினம் விசாரணைக்காக நீதிமன்றம் சென்ற வேளை தனது இந்தக் கருத்தை ஊடகவியலாளரிடம் தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேசத்தின் புதிய முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள மொனாயன சிங்யாதவ் அந்த மாநில அரசியல் தலைவர்களுக்கு எதிராகத் தொடரப்பட்டிருந்த பொடா வழக்குகளை வாபஸ் பெறுவதாகத் தெரிவித்தார்.

இதேபோன்று தமிழக அரசினாலும் இந்த வழக்குகளை வாபஸ் பெற முடியும் என அவர் கூறியுள்ளார்.

பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள வை.கோபாலசாமி உட்பட அவரது ஆதரவாளர்கள் கடந்த ஒருவருட காலமாக சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (பி-2)

## பலஸ்தீன அதிபர் - பிரதமர் இடையிலான அதிகாரப் போட்டி வலுவடைகிறது

பஸ்தீனப் பிரதமர் முகமட் அப்பாஸிற்கும் அதிபர் யஸீர் அரபாத்திற்கும் இடையிலான அதிகாரப் போட்டி இக்கட்டானதொரு நிலையை அடைந்துள்ளது.

இந்த விவகாரம் பாராளுமன்றத்திற்கு வருமளவிற்குத் தீவிரம் அடைந்துள்வது.

தமக்கு முறையான அதிகாரம் கிடைக்காத பட்சத்தில் சமாதான நடவடிக்கையில் ஈடுபடப் போவதில்லையெனப் பலஸ்தீனப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

பிரதமரின் கொள்கைக்குப் பாராளுமன்றத்தின் பூரண ஆதரவு கிடைத்தால் அவர் சமாதான நடவடிக்கைகளைத் தொடர்வார் அல்லது ஓய்வு பெறுவார் என்று பலஸ்தீனத் தகவல்த்துறை அமைச்சர் நபீலாம்ஸ் தெரிவித்துள்ளர்.

உலக நாடுகளின் அழுத்தங்களுக்கு ஏற்ப பிரதமராக நியமிக்கப்பட்ட முகமட் அப்பாஸ் நேற்றுப் பாராளுமன்றத்தில் இதுவிடயம் தொடர்பான விசேட உரையொன்றை நிகழ்த்தியிருந்தார். (பி-2)

உலக தரிசனம்

## தென்கொரிய ரக்வண்டி சாரதிகளின் வேலைநிறுத்தம் தொடர்வதால் 600 மில். டொலர்கள் நட்டம்

(சியோல்)

தென்கொரியாவில் ரக்வண்டிச் சாரதிகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைநிறுத்தப் போராட்டம் 2ஆவது வாரமாகவும் தொடர்கின்றது.

இதனால், 600 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கார்கோ போக்குவரத்துத் தொழிலாளர்கள் சங்க உறுப்பினர்கள் தங்கள் தொழிற்சங்கம் அங்கீகரிக்கப்பட வேண்டும். கூடிய கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என்பன உட்படப் பல கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்வரை வேலைநிறுத்தம் தொடரப்படும் என்றும் சங்கத்தில் அங்கம் வகிக்கும் 30 ஆயிரம் தொழிலாளரும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவர் என்றும் தொழிற்சங்கவாதிகள் கூறியுள்ளனர்.

இதேவேளை, ரக்வண்டிச் சாரதிகள் தனிப்பட்ட தொழிலாளர்கள் என்றும் அவர்களால் தொழிற்சங்கம் ஒன்றை உருவாக்க அதிகாரம் இல்லை என்றும் தென்கொரிய அரசாங்கம் தெரிவித்துள்ளது. (பி-2)

## பாகிஸ்தான் செல்லவிருந்த இந்திய நீதிபதிகள் குழுவின் நல்லெண்ண பயணம் ரத்து

(புதுடில்லி)

இந்தியாவில் இருந்து பாகிஸ்தானுக்கு முதல் முறையாக நல்லெண்ணப் பயணம் மேற்கொள்ளவிருந்த நீதிபதிகளின் பயணம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

பாதுகாப்பைக் காரணமாகக் கூறி இஸ்லாமாபாத் இந்தப் பயணத்தை ரத்துச்செய்துள்ளது.

முன்னதாக விஸாக்கள் கிடைக்காததால், இந்தப் பயணம் ஒருநாள் ஒத்திவைக்கப்பட்டது.

நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டால், இந்தப் பயணம் நடைபெறக்கூடும் என்றும் பாகிஸ்தான் அதிகாரிகள் தம்மிடம் தெரிவித்துள்ளதாக இந்தியா பாக்கவுண்ஸிலின் துணைத் தலைவர் ஹரீஸ் அஹர் பாலா நிருபரிடம் தெரிவித்தார். (பி-9)

## அமெரிக்காவில் சிகிச்சைபெற்றுவரும் முரசொலிமாறன் நாடு திரும்புகிறார்

(சென்னை)

அமெரிக்காவில் சிகிச்சை பெற்றுவரும் முரசொலி மாறன் எதிர்வரும் 6ஆம் திகதி சென்னை திரும்புவதாக தி.மு.க. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அமெரிக்காவில் இருந்து விமானம் மூலம் அழைத்துவரப்படும் இவர் போரூர் இராமச்சந்திரா மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவார் என தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இநநிலையில், எதிர்வரும் 13ஆம் திகதி பிரதமர் வாஜ்பாய் சென்னைக்கு விஜயம் செய்யவுள்ளார். இந்த விஜயத்தின் போதே அவர் ராமமச்சந்திரா மருத்துவமனைக்குச் சென்று முரசொலி மாறனைப் பார்வையிட இருப்பதாகவும் தெரியவருகின்றது. (பி-9)

## நாடாளுமன்றம் செல்ல மாயாவதி முயற்சி

(புதுடில்லி)

உத்தரப்பிரதேசத்தில் முன்னாள் முதலமைச்சர் மாயாவதிக்கும், பாரதிய ஜனதாக் கட்சிக்கும் இடையிலான முறுகல் நிலை தீவிரமடைந்து வருகிறது.

இருதரப்பினருக்குமிடையில் முன்னர் ஏற்பட்ட முறுகல் நிலையை அடுத்து முதலமைச்சர் பதவியினையும், சட்டமன்ற உறுப்பினர் பதவியினையும் மாயாவதி ர்ராஜினாமா செய்திருந்தார்

இந் நிலையில், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பாரதிய ஜனதாக் கட்சியைத் தோற்கடிக்கும் முயற்சிகளில் அவர் இறங்கியிருப்பதாகக் கூறப்படுகின்றது.


இதன் முதற்கட்டமாக எதிர்வரும் மார்ச்மாதம் நடை பெறவிருக்கும் மேல் சபைத் தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராக வருவதற்கு அவர் முடிவு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (பி-9)

# கிழக்கில் பலம் பொருந்திய நிலையில் புலிகள் எந்த நேரத்திலும் அவர்கள் வசமாகலாம்

# கதிர்காமர் வெளியிட்ட கருத்துக்கு பிரதமர் ரணில் கண்டனம்; மறுப்பு

(கொழும்பு)

**கிழகக்கு மாகாணத்தை எந்தத் தருணத்திலும் தமிழீழ விடுதலைப்புலிகள் கைப்பற்றக்கூடிய நிலை இருப்பதாக முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஸ்மன் கதிர்காமர் கூறியுள்ள கருத்து மிகவும் தவறானதாகும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**



நேற்று முன்தினம் அமைச்சரவை கூடுவதற்கு முன்னர் நடைபெற்ற கூட்டத்தில் கிழக்கு மாகாணத்தைப் புலிகள கைப்பற்றத் தயாராகி வருவதாக லக்ஷ்மன் கதிர்காமர் அண்மையில் தெரிவித்திருந்தமை பற்றி கருத்துத் தெரிவிக்கையிலேயே பிரதமர் தனது மேற்படி கண்டனத்தை வெளியிட்டார்.

இதுபற்றி தொடர்ந்து கருத்துக் கூறிய பிரதமா,

கிழக்கில் பணியாற்றிவரும் கடற்படை அதிகாரி ஒருவர் இது பற்றி அறிக்கையொன்றை வெளியிட்டுளளதாக சுட்டிக்காட்டியே லக்ஷ்மன் கதிர்காமர் இந்தத் தகவலை வெளியிட்டிருககிறார்.

இவரின் இத்தகைய கருத்தினால் நாட்டிற்கே பெரும் அச்சுறுத்தல் நிலை ஏற்பட்டுள்ளது.


பாதுகாப்புத்துறை அதிகாரிகளை உடனடியாக அழைத்து கதிர்காமரின் கருத்துப்பற்றி தான் கேட்டபோது அவர்கள் இதனை முழுமையாக நிராகரிததுவிட்டனர். அத்துடன் கதிர்காமர் சுட்டிக்காட்டியுள்ள மேற்படி கடற்படை அதிகாரிக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும எனவும் என்னைக் கேட்டுள்ளார்கள்.

மேலும், சம்பந்தப்பட்ட கடற்படை அதிகாரியை ஜனாதிபதியும், கதிர்காமரும் தனியாகச் சந்தித்துப் பேசியதாகவும் இதனையடுத்தே இவ்அதிகாரி இத்தகைய தவறான செய்தியை வெளியிட்டு இருக்கிறார் என்றும் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் என்னிடம் சுட்டிக்காட்டி உள்ளனர்.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் பாதுகாப்பு விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. எனவே தன்னிச்சையாக உண்மையற்ற செய்தியை வெளியிட்டுள்ள மேற்படி கடற்படை அதிகாரிக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுப்பதுடன், இத்தகைய தவறான செய்திகளால் சமாதான் நடவடிக்கைகள் சீர்குலையும் அபாயம் இருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர் என்று ரணில் விக்கிரசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்தமாத நடுப் பகுதியில் இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த லக்ஷ்மன் கதிர்காமா அங்கு நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில்,

திருகோணமலை துறைமுகம் தற்போது விடுதலைப்புலிகளால் சூழப்பட்டிருக்கின்றது. இதன் காரணமாக இந்தியக் கம்பனிகளால் அங்கு குத்தகைக்கு எடுக்கப்பட்டிருக்கும் எண்ணைக் குதங்கள்மீது எந்த நேரத்திலும் தாக்குத[illegible] அபாயம் உள்ளதெனவும்,



இவ் எண்ணெய்க் குதங்களுக்கு எவ்வித பாதுகாப்பு ஏற்பாடுகளும் இல்லாத காரணத்தினால் இந்தியா இதுவிடயத்தில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் எனவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(உ-10)

## குரங்கு பாஞ்சான் முகாமிற்குள் செல்ல க.கா.குழுவுக்கு அனுமதி மறுப்பு

### பேச்சாளர் அக்னிஸ் தகவல்

(திருகோணமலை)

கிண்ணியா குரங்குபாஞ்சான் குளத்தில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் முகாமினை பார்வையிடுவதற்கு விடுதலைபபுலிகள் அனுமதியளிக்கவில்லையென தமிழீழ விடுதலைப்புலிகள் அமைத்து வருவதாக வெளியான செய்தியினை அடுத்து நேற்று முன்தினம் சம்பவ இடத்திற்கு தருகோணமலை மாவட்ட கண்காணிப்புக் குழுவினர் விஜயம் செய்திருந்தனர்.

திருந்த போதும், முகாமிற்குள் பிரவேசிக்க நேற்று விடுதலைப் புலிகள் அனுமதிக்கவில்லை.

இவ்விடயம் குறித்து விரைவில் விடுதலைப் புலிகளுடன் பேசுவதுடன், இவ் அனுமதி மறுப்பிற்கான விளக்

## விளையாட்டுச் செய்திகள்

### உலகக்கிண்ண கால்பந்தாட்ட போட்டி செயற்கை ஆடுகளத்தில்

சம்மேளனத் தலைவர் தகவல்

## உலகக்கிண்ண கால்பந்தாட்ட போட்டி செயற்கை ஆடுகளத்தில்

## சம்மேளனத் தலைவர் தகவல்

2010ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ண கால்பந்தாட்ட போட்டிகளின் போது, செயற்கை ஆடுகளத்தைப் பயன்படுத்தப்போவதாக சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனத் தலைவர் செப்.பிளட்டர் கூறியுள்ளார்.

அண்மையில் நடைபெற்று முடிந்த 17வயதிற்குட்பட்ட உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டியினை செயற்கை ஆடுகளத்தில் வெற்றிகரமாக நடாத்தி முடித்திருப்பதாகவும் .பிளட்டர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கெல்சின் கீயில் அமைந்துள்ள செயற்கை ஆடுகளத்தைக்கொண்ட டுளோ மைதானத்தில் இவ் இறுதிப் போட்டி நடைபெற்றது.

இப் போட்டியினைப் போன்றே இச் செயற்கை ஆடுகள மைதானம் சிறப்பான பெறுபேறுகளைத் தந்ததாகவும், இதேபோன்ற செயற்கை ஆடுகளங்களைக் கொண்ட மைதானங்களை ஏனைய நாடுகளிலும் அமைபபது சாத்தியமானது எனவும் செப்.பிளட்டர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஜேர்மனியில் 2006ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக். கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளை செயர்கை ஆடுகளத்தில் நடாத்துவதற்கான வாய்ப்புகள இல்லாதுள்ள போதும், 2010ஆம் ஆண்டு ஆபிரிக்காவில் நடைபெறவுள்ள உலகக்கிண்ண கால்பந்தாட்டப்போட்டிகளை செயற்கை ஆடுகளத்தில் நடாத்துவதற்காக ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இவா கூறியுள்ளாா. (உ-68)

## பாகிஸ்தான் அணி இலங்கையிடம் படுதோல்வி

19வயதிற்குட்பட்ட பாகிஸ்தான் அணிகெதிரான ஐந்தாவதும், இறுதியுமான ஒருநாள் கிறிக்கெற் போட்டியில்இலங்கை அணி 7விக்கெற்றுக்களால் வெற்றிபெற்றுள்ளது.

5 போட்டிகள் கொண்ட இவ் ஒரு நாள் போட்டித் தொடரின் முதல நான்கு போட்டிகளிலும் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்று தொடரைக் கைபற்றியுள்ள நிலையிலும், இலங்கை அணிக்கு ஐந்தாவது போட்டியில ஆறுதல் அளிக்கும் வகையில் இந்த வெற்றி கிடைத்திருக்கின்றது.

சரவணமுத்து விளையாட்டரங்கில் நடைபெற்ற இவ் ஐந்தாவது ஒருநாள் போட்டி மழைகாரணமாக இரண்டு தடவைகள் தடைப்பட்டன. இதனால் அணிக்கு தலா 38ஓவர் வீதம் வழங்கப்பட்டது.

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 37.4ஓவர் முடிவில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 183ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

பாகிஸ்தான் அணி துடுப்பெடுத்தாடிய போது மழை குறுக்கீடு செய்தமையினால் டக்வார் லூயிஸ் விதிக்கமைய இலங்கை அணியின் வெற்றி இலக்கு 38ஓவர்களில் 191 ஓட்டங்கள் என நிர்ணயிக்கப்பட்டது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 36.3 ஓவர் முடிவில் 3விக்கெற்றுக்களை மட்டும் இழந்து 191 ஓட்டங்களை நிறைவுசெய்து வெற்றியீட்டியது. இதன்மூலம் இப் போட்டியில் 7விக்கெற் வித்தியாசத்தில் இலங்கை அணி பாகிஸதான் அணியை வெற்றி கொண்டது.

(உ-68)

## பேச்சாளர் அக்னிஸ் தகவல்

(திருகோணமலை)

கிண்ணியா குரங்குபாஞ்சான் குளத்தில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் முகாமினை பார்வையிடுவதற்கு விடுதலைபபுலிகள் அனுமதியளிக்கவில்லையென கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் அக்னிஸ் பிரகாரொட்டி தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையல், குரங்குபாஞ்சான் குளத்தில் மேலும் ஒரு புதிய முகாமினை தமிழீழ விடுதலைப்புலிகள் அமைத்து வருவதாக வெளியான செய்தியினை அடுத்து நேற்று முன்தினம் சம்பவ இடத்திற்கு திருகோணமலை மாவட்ட கண்காணிப்புக் குழுவினர் விஜயம் செய்திருந்தனர்.

கடந்த வாரம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் கண்காணிப்புக் குழுவிற்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் மேற்படி முகாமினை பார்வையிட அனுமதி வழங்கப்பட்ட நிலையில் இவ் விஜயம் அமைந்திருந்த போதும், முகாமிற்குள் பிரவேசிக்க நேற்று விடுதலைப் புலிகள் அனுமதிக்கவில்லை.

இவ்விடயம் குறித்து விரைவில் விடுதலைப் புலிகளுடன் பேசுவதுடன், இவ் அனுமதி மறுப்பிற்கான விளக்கத்தையும் எதிர்பார்க்கின்றோம்.

விடுதலைப்புலிகளின் தலைமைப் பீடத்தைச் சந்தித்து இது விடயமாக கலந்துரையாடுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன என்று தெரிவித்துள்ளார். (உ-10)

## ஆட்குறைப்பு நடவடிக்கைக்கு அதி உயர் பாதுகாப்பு வலயமே

### காங்கேசன் சீமெந்து கூ.தா. ஊழியர் மனக்குமுறல்

(திருநெல்வேலி)

காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் ஆட்குறைப்பு நடவடிக்கைக்கு இராணுவத்தினரின் அதி உயர் பாதுகாப்பு வலயமே காரணம் என ஆட்குறைப்பினால் பாதிககப்பட்ட ஊழியர்களின் சங்கத் தலைவர் எஸ்.பாலகிருஷ்ணன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் கூறுகையில்,

இராணுவத்தின் ஆக்கிரமிப்புக் காரணமாக காங்கேசன்துறைச் சீமெந்துக் கூட்டுத்தாபனம் தொடர்ந்தும் இயங்கமுடியாத நிலையில் இருப்பதன் காரணமாகவே இந்த ஆட்குறைப்பு இடம்பெற்றதாக காங்கேசன்துறைச் சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் தலைமைக் காரியாலயம் எமக்குக் காரணம் கற்பித்துள்ளது.

எம்மைச் சொந்த இடங்களில் குடியிருக்க முடியாது அகதிகளாக்கிய இந்த உயர் பாதுகாப்பு வலயம் எமது தொழிலையும் இழக்கச் செய்து எமது வாழ்க்கையுடன் விளையாடுகின்றது.

இந்த ஆக்கிரமிப்பு இராணுவத்தின் அடக்குமுறைகளைப் பார்த்து இனியும் வாளாவிருக்க முடியாது என்று கண்கள் கலங்கக் கூறினார்.

இதேவேளை, தரத்தை அடிப்படையாகக் கொண்டு, தென்பகுதியில உற்பத்தி செய்யப்படும் சீமெந்துப் பைக்கற்றுக்களில் காங்கேசன் துறைச் சீமெந்துக் கூட்டுத்தாபனம் எனக் குறிப்பிடப்படுவது குறித்து வடபகுதி தமிழ் மக்கள் அதிருப்தி கொண்டுள்ளனர் என்றும் சுட்டிக் காட்டினார். உ-43, 16)

## ஆடை உற்பத்தியில் 12வீத வருடாந்த வளர்ச்சி

(கொழும்பு)

உலக சந்தையுடன் போட்டியிட வேண்டுமாயின் இலங்கையின் ஆடை உற்பத்தியில் 12வீதம் வருடாந்த வளர்ச்சி காணப்பட வேண்டும் என்று ஆடை உற்பத்தியாளர்களின் ஒருங்கிணைப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

தற்போதைய கோட்டாமுறை 2005ஆம் ஆண்டுடன் முடிவடைந்ததால் அடுத்துவரும் சவால்களை எதிர்நோக்க இத்துறையில் பாரிய அபிவிருத்தி ஏற்பட வேண்டும் என நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற சங்கத்தின் ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இதற்கான விசேட 5வருடத் திட்டமொன்றை வகுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும ஆடைகளில் கூடுதலானவை அமெரிககாவுக்கே ஏற்றுமதி செய்யப்படுவதாகவும், உலக வர்த்தக அமைப்பின் உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு ஏற்ப இன்னும் 2வருடங்களில் அதற்கான கோட்டா முடிவடைவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(உ-08)

# முற்றத்து ஒற்றைப் பலா!

வெள்ளி முற்றம்



எழுபது வயதானாலும் கொழும்பு வீதிகளில் கம்பீரமாக சைக்கிள் ஓடித்திரிந்த சின்னத்துரையர் இறந்து விட்டார். கொழும்பில் இருந்து ஒன் பது வருட அஞ்ஞாத வாசத்தை முடித்துக்கொண்டு பாதை திறந்த வுடன் சமாதானம் மலரப் போகி றது என்ற நம்பிக்கையோடு மனைவி, பேரப்பிள்ளைகள்,வளர்ப்பு மகள் சாவித்திரி சகிதம் தனது புனிதமான பிறந்த மண்ணுக்குத் திரும்பி வீட்டு முற்றம்வரை வந்தவர் முற்றத்தில் நின்ற... அவர் ஆசை ஆசையா கப் பார்த்து வளர்த்த.... அவருடன் சேர்ந்து வளர்ந்த... அவரது பெரு மதிப்புக்குரிய- அந்த ஒற்றைப் பலா மரம் அடியற்ற மரமாக சரிந்து உக் கிப்போய் கறையான் அரித்த நிலை யில் கிடப்பதைக் கண்டதும் ஐயோ! என்றபடி இரு கரங்களையும் தூக் கித் தலையில் அடித்தபடியே விழுந்தாராம். அப்படி விழுந்தவர் அதன் பின்பு- எழுந்திருக்கவே யில்லையாம்.

ஊர் முழுவதும் அவரைப் பற் றிய கதைதான். ஒரு பலாமரம் பட்டுப்போய்விட்டது என்பதற்காக யாராவது மண்டையைப் போடுவாரா? என்ன மனுசரடா இவர்? அவரைப் பற்றியும் அந்தப் பலாமரத்திற்கும் அவருக்கும் இடையே இருந்த ஆத் மார்த்தமான ஒட்டுறவு பற்றியும் தெரியாதவர்களுக்கு எல்லாம் அவ ரது மரணம் ஒரு கேலிக்குரிய ஒன் றாகவே இருந்தது. ஆனால் அவ ரையும் அந்தப் பலாமரத்தையும் பற்றி அறிந்தவர்களுக்கு அவரது மரணம் அர்த்தமுள்ள ஒன்றாகவும், மிகவும் கவலைக்குரியதாகவும் தோன்றியது.

சின்னத்துரை... பெயருக்கேற்றாற் போல் அந்த ஊரில் அவர் ஒரு சின்னத்துரையாகவே வாழ்ந்து வந் தார். வெள்ளைக்காரன் ஆட்சியில் அவனது கடற்படையில் ஒரு இலிகி தராகக் கடமையாற்றி ஓய்வுபெற்று தனது பிறந்த மண்ணுக்கு வந்து வாழ்ந்தவரைக் கண்டாலே ஊர் மக் களுக்கெல்லாம் ஒருவித பயமும் மரியாதையும் ஏற்பட்டு விடும். பட்டுப போன்று நரைத்த காமராஜர் மீசை யுடனும் முன்பக்கத்திலும் நடுவிலும வழுக்கை விழுந்த வெள்ளைத் தலை யுடனும் அவர் எழுந்து நடந்து வந் தால் அதில் ஒரு தனிக் கம்பீரம் இருக்கும்.

மூத்த புதல்வர்கள் இரண்டு பேரும் கனடாவிலும் மூன்றாவது மகனும் நான்காவதாகப் பிறந்த ஒரே ஒரு மகளும் லண்டனிலும் நிரந்தரமாகவே வசித்து விட்டதால் சினனத்துரையருக்கு அவரது மனை வியும் இப்போது வளர்ப்பு மகளாக அவரால் தத்தெடுக்கப்பட்டிருக்கிற முனபு அவர் வீட்டில் சமையல்காரி யாக இருந்து இறந்துபோன கமலம் மாளின் மகளுமாகிய சாவித்திரி யுமே உறுதுணையாகவும், ஆறுத லாகவும் இருந்தார்கள். ஊரிலேயே பெரிய நாற்சார் வீடு அவருடையது. அவருக்கு மரங்கள் என்றால் உயிர்.வீட்டைச் சுற்றியும் ஒரு நாளில் சுற்றிப் பார்த்துவிட முடியாத தனது காணி முழுவதிலும் மா, பலா, வாழை, கமுகு, தோடை, எலுமிச்சை, மாதுளை என்று எத்தனையோ விதம் விதமான மரங்களை எல் லாம் வளர்த்து வீட்டையே ஒரு சோலையாக்கியிருந்தார். வீடு நிறைய அத்தனை மரங்கள் இருந்தாலும், அவரது நாற்சார் வீட்டு முற்றத்தில் அடர்ந்து, படர்ந்து, கிளைபரப்பி நின்ற பலாமரத்தில் தான் அவரது உயிர், வாழ்க்கை எல்லாமே அடங்கி யிருந்தது.

ஓய்வு கிடைக்கும் போதெல் லாம் அந்தப் பலாமரத்தின் கீழ் நிரந்தரமாகப் போடப்பட்டிருக்கும் சாய்வு நாற்காலியில் வந்து சாய்ந்து படுத்து விடுவார். அப்படி அவர் படுத ததும் அந்தக்காலத்தில் வெளிவந்த ஆங்கில, தமிழ் தினசரிகள் எல் லாம் அவர் கரங்களில் மாறிமாறிச் சுயம்பரம் நடத்தும். பத்திரிகைகள் படிக்கும்போதும் இடையிடையே அந்தப் பலாமரத்தை அண்ணாந்து பார்த்துத் தனக்குள் பெருமிதப்பட் டுக்கொள்வார். ...சே... ஆலமரம் போல இதற்கும் விழுதுகள் விட்டுப் படரும் இயல்பு இருந்தால் எவ் வளவு சோக்காயிருக்கும் என்று கூட நினைத்துக் கவலைப்படுவார். நல்லவேளையாக கடவுள் பலாமரத் திற்கு அந்த இயல்பைக் கொடுக்க வில்லை. கொடுத்திருந்தால் சின்னத் துரையரின் வீடு,வளவு எல்லாவற் றையுமே இப்போது அந்தப் பலா மரம் ஆக்கிரமித்திருக்கும். அதில் இருந்து கிளம்பி வரும் ஒரு விழு தைக்கூட சின்னத்துரையர் வெட்ட விட்டிருக்க மாட்டார்.

அந்தக்காலத்தில் இப்படித்தான் அடுத்த வீட்டில் வசிக்கும் வேலாயு தம் இவர் வீட்டு முற்றத்துப் பலா வில் பலாப் பழுத்தல் குத்த வரு வான். அப்படி அவன் வந்து விட் டால் போதும் சின்னத்துரையர் எல்லா வேலைகளையும் நிறுத்திவிட்டு கையில் இருக்கும் பத்திரிகைகளை யும் தூக்கி எறிந்து விட்டு அவன் பழுத்தல் குத்தி முடித்து புறப்படும் வரை கண்ணும் கருத்துமாக அவன் பக்கத்திலேயே நிற்பார். கிடாய் வளர்ப்பது வேலாயுதத்தின் பிறவித் தொழில். அதுவும் வேள்விக் கடாக் களை வளர்ப்பதில் அவன் சிறந்த தொழில்நுட்பங்கள் அறிந்தவன். எந்தக் கோவிலில் வேள்வி என்றா லும் ஒரு மாதத்திற்கு முன்னரே வேலாயுதத்திடம் ஓடர்கள் வந்து குவிந்துவிடும். அதனால் அவனை ஆட்டுக்கிடாய் வேலாயுதம் இன்னும் சிறப்பாகச் சொன்னால் வேள்விக் கிடாய் வேலாயுதம் என்று குறிப்பிட்டுச் சொனணால்தான் ஊர் மக்களுககெல் லாம் அடையாளம் புரியும. வெறுமனே வேலாயுதம் வீடு எது என்று யாரா வது கேட்டு வந்தால் வேறு வீட்டைத தான் காட்டுவார்கள்.

இந்த வேலாயுதம் ஒருநாள் பழுத்தல் குத்தும்போது மேலே மரக்கிளையொன்றில் பழுத்துவிட் டாலும் இதுவரை உதிர்ந்து கீழே விழாமல் இருந்த ஒரு பலாப்பழுத் தலை குறிவைத்து தனது குத்துக் கம்பியால் அடித்துவிட்டான். அப்படி அவன் அடித்தபோது பழுத்தலுடன் சேர்ந்து இரண்டு குருத்திலைகளும் விழுந்து விட்டன. இதைச் சின்னத் துரையர் கண்டுவிட்டார். வந்தது கோபம் வேலாயுதத்தின் குத்துக் கம்பியைப் பறித்து வீசி போடா வெளியே என்று பாய்ந்து விட்டார். திக்குமுக்காடிப் போன வேலாயுதம் அவரின் காலில் விழாத குறையாக வும் அழாத குறையாகவும் கெஞ் சிக் கூத்தாடி அவரிடம் இனிமேல் இப்படிச் செய்யமாட்டேன் என்று மன்னிப்புக் கேட்ட பின்புதான் சரி சரி... இனிமேல் நான் வீட்டில் நிற்கும் போது தான் நீ பழுத்தல் குத்த வரவேண்டும் என்ற நிபந்தனை யுடன் அவனைத் தொடர்ந்து பழுத் தல் குத்த அனுமதித்தார். சின்னத் துரையரை பகைத்துக் கொண்டால் வேலாயுதத்தின் தொழில் அவ் வளவுதான் அப்படியே முடங்கிப் படுத்துவிடும்.

சண்டை உக்கிரமடைந்து சொந்த ஊரில் இனிமேல் வாழமுடியாது என்ற நிலை ஏற்பட்ட பின் குடும் பத்துடன் புறப்பட்டு கொழும்பில் மாடி யில் தட்டுமுட்டு வீட்டில் கடந்த ஒன் பது வருடங்களாக வசித்து வந்த சின்னத்துரையருக்கு சமாதானப் புரிந்துணர்வு உடன்படிக்கையும் ஏ-9 பாதை திறப்பும் நாவில் தேன் வார்த்தது போல் இருந்தது.சனியன் தொலைகிறது இனியாவது இந்த தட்டுமுட்டு வீட்டில் இருந்து வெளி யேறி சொந்த மண்ணுக்குப் போய் முற்றத்தில் பலாமரத்தின் கீழ் படுத் தபடி கடைசிக்காலத்தை கழிக்க லாம் என்ற பூரிப்புடன் டொல்பின் ஒன்றைப் பிடித்து மனைவியையும், லண்டனில் இருந்து ஸ்ரீலங்கா பார்க்க வந்திருந்த கடைசி மகளின் பிள்ளைகளையும் சாவித்திரியையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டு விட் டார்.

வரும் வழியில் ஓமந்தை தாண்டி ஏ-9 பாதைக்குள் புகுந்தவருக்கு வீதியின் இருமருங்கிலும் அடர்ந்து சடைத்து வளர்ந்திருந்த பாலை, முதிரை மரங்களையும் மற்ற காட்டு மரங்களையும் பார்த்த போது வானுக குள்ளேயே உள்ளம் துள்ளிக் குதித்தது.ஆனாலும் காட்டுமரங்கள் வெட்டிச் சரித்து கொளுத்தப்படும் காட்சியும், வீதியோர மரங்கள் இராட சத வாகனங்களால் இடித்து விழுத் தப்படும் காட்சிகளும் இடைக்கி டையே விலகிச் சென்றபோது அவ ரது நெஞ்சிலும் வாகனங்கள் இடிப் பது போன்ற உணர்ச்சியும் ஏற்பட் டது.

கிளிநொச்சியூடாக வரும்போது வீதியின் வலது பக்கத்தில் மரத்தின் உடலும் மனிதனின் தலையுமாக ஒரு படம் வரையப்பட்டு அப்படத்தின் கழுத்துப்பகுதியில் ஒருவன் கோடரி யால் வெட்டி இரத்தம் சொரிகின்ற நிலையில் நாட்டப்பட்டிருந்த ஒரு படப்பலகை அவர் உள்ளத்தை கொள்ளை கொண்டு ஆட்டிப் படைத்து விட்டது.அதைப் பார்த்தவர் தம்பி வானை நிற்பாட்டு என்று கூறி வானில் இருந்து இறங்கியும் விட்டார்- என்னை அழிப்பதால் உங்களை நீங் களே அழிக்கின்றீர்கள்-படப் பலகை யின் கீழிருந்த வாசகத்தைப் படித் தவர் கண்கலங்கி விட்டார். இவர் களுக்குப் புரிகிறது, அவர்களுக்குப் புரிகிறதா என்றும் முணுமுணுத்தார்.

இயக்கச்சியால் திரும்பி பளைக்குள் புகுந்தவருக்கு வீதியின் இருபுறமும் தெரிந்த காட்சிகளால் வயிற்றைக் கலக்கத் தொடங்கிவிட்டது. கூரை இல்லாத வீடுகளையும் தலையில் லாத முண்டங்களான தென்னை களையும் பார்த்தவரின் பிரார்த்தனை உச்ச நிலைக்கே சென்றுவிட்டது. ''கடவுளே! வீடு போனாலும் பரவா யில்லை. புதிதாக ஒன்று கட்டிக் கொள் ளலாம். ஆனால் என் வீட்டு மரங் களுக்கு அதுவும் என்னுடனேயே பிறந்து என்னுடனேயே வளர்ந்த என் முற் றத்துப் பலாவிற்கு ஒன்றும் நடந்திருக் கக்கூடாது''

இப்படிப் பிரார்த்தனை செய்து கொண்டு வந்தவரால் அவர் வீட்டு முற்றத்துப் பலா கிடந்த காட்சியை சகித்துக்கொள்ள முடியுமா?

சுடலைக் காரியங்கள் முடிந்து எல்லோரும் வீடு திரும்பி தலைமுழுகி சிலர் சாப்பிடவும் உட்கார்ந்து விட்டார் கள். அப்போது தான் சுடலையில் நின்று வந்த ஐயப்புக்கிழவன் வியர்த் துக் களைத்து ஓடிவந்தான்.

''அம்மா எல்லாக் கட்டைகளை யும் போட்டு எரிச்சுப்போட்டன். விறகு கட்டை எல்லாம் முடிஞ்சுது. ஆனால ஐயான்ரை கட்டை மட்டும் வேகேல்லை அப்படியே கிடக்குது இன்னும் ஒரு லோட் விறகு வேணும்''

சின்னத்துரையர் வீட்டு வாசல் திண்ணையில் அவருடன் வளர்ந்து இப்போது சரிந்து போய்க்கிடக்கும் அவரது முற்றத்துப் பலாக் கட்டை யைப் பார்த்தபடியே குந்திக்கொண் டிருந்த வேள்விக் கிடாய் வேலாயு தத்திற்கு ஐயப்பு கூறிய வார்த்தை களைக் கேட்டதும் உச்சந்தலைக் குள் என்னவோ பொறி தட்டியது. விறுவிறுவென்று எழுந்து தன்வீட்டு வண்டிலைப் பூட்டிக்கொண்டு வந்த வன் ஐயப்புவின் துணையுடன் முற்றத்தில் கிடந்த பலாக்கட்டையை வண்டியில் ஏற்றினான்.

புதுக்கவி

''அம்மா ஐயாவை எரிக்க வேறை விறகு ஒண்டும் தேவையில்லை.இந் தப் பலாக்கட்டையே போதும். கொஞ் சம் இருங்கோ நான் இப்ப உடனை எரிச்சுப் போட்டு வாறன். ஐயப்பு ஏறு வண்டிலிலை''

வேள்விக் கிடாய் வேலாயுதத்தின் வாக்கு தப்பவில்லை. சின்னத்துரை யரின் மேல் தூக்கியடுக்கிய பலாக் கட்டையுடன் சேர்ந்து அவரின் உடல பத்து நிமிடத்துக்குள் கிசுகிசுவென்று எரிந்துவிட்டது. அவரின் ஆத்துமா இனி சாந்தியடைந்துவிடும். அவரை யும அவருடன் வளர்ந்த பலாமரத் தையும் ஒன்றாகச் சேர்த்துக் கட்டை யில் அனுப்பிவிட்ட திருப்தி இப்போது வேலாயுதத்தின் முகத்தில் தெரிகிறது.

---

# படையின் அனுமதித்த காணிகளில் பயிர்ச் செய்கைக்குத் தடை

## அடையாள அட்டை பெற்றவர்கள் ஏமாற்றம்

(திருநெல்வேலி)

தென்மராட்சி தெற்கிலுள்ள மறவன்புலோ, தனங்கிளப்புப் பகுதி களில் காலபோக நெற்செய்கையை மேற்கொள்வதற்குத் தொடர்ந்தும் படை யினர் தடையாகவிருந்து வருகின்றனர்.

மேற்படி பகுதியில் உயர் பாது காப்பு வலயமாகப் பிரகடனப்பட்டி ருந்த 5ஆயிரம் ஏக்கர் பயிர்ச்செய்கை நிலத்தில் ஆயிரம் ஏக்கரை அண் மையில் பயிர்ச்செய்கைக்கு ஏது வாக படையினர் விடுவித்திருந்த னர்.

இந்த நிலையில், இங்கு பெரும் போக நெற்செய்கைக்குச் செல்ல அனுமதி பெறும் பொருட்டு படை யினரின் அறிவுறுத்தலின் பேரில் சம்பந்தப்பட்ட 256 விவசாயிகள் 2 வாரங்களுக்கு முன்பே விசேட அடையாள அட்டைகளையும் பெற்றி ருந்தனர்.

தவிர, பயிர்ச்செய்கைக்கு ஏது வாக அங்கு மிதிவெடி அகற்றும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டன.

எனினும், தமது பயிர்ச்செய்கை நிலங்களுக்குச் செல்வதற்கான அனுமதியினை படையினர் இன்ன மும் நடைமுறைப்படுத்தவில்லை எனவும், இதனால் தமது பெரும் போகச் செய்கை பாதிக்கப்பட்டு விடுமோ என்று தாம் கவலைப்படுவ தாகவும் விவசாயிகள் தெரிவித்துள் ளனர். (உ-43,16)

# போலிச் செயலகத்தைப் பொலிஸார் முற்றுகை

(கொழும்பு)

போலி பிறப்புச் சான்றிதழ்கள், விவாகப் பதவிவுச் சான்றிதழ்கள், தேசிய அடையாள அட்டைகளைத் தயாரிக்கும் சட்டவிரோத நிலையம் ஒன்று குருநாகல் பிரதேசத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து சென்ற விசேட பொலிஸ் குழுஒன்றே இந்த நிலை யத்தைக் கண்டு பிடித்துள்ளதாக மோசடி தடுப்புப் பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்த நிலையத்திலிருந்து 200ற் கும் மேற்பட்ட போலிப் பிறப்புச் சான்றிதழ்களையும், போலி அடை யாள அட்டைகள் சிலவற்றையும் அர சாங்க உயர் அதிகாரிகளின் பெயரி லான போலி இறப்பர் முத்திரைகளை யும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

போலிப் பிறப்புச் சான்றிதழ் ஒன்றை வழங்க 3ஆயிரம் ரூபா முதல் 5ஆயிரம் ரூபா வரை பெறப் படடுள்ளதாக விசாரணைகள் மூலம தெரியவந்துள்ளது. இது தொடர் பாக நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் வசார ணைகள் தொடர்கின்றன (உ-8)

## ஆன்மீக நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

போயா தினமான எதிர்வரும் 10ஆம் திகதி புதன்கிழமை யாழ். பகவான் ஸ்ரீசத்திய சாயி சேவா நிலை யத்தில் அதிகாலை 5.00 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமா கும் ஆன்மீக நிகழ்ச்சிகள் நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவடை யவுள்ளது. (உ-18)

### கல்விக் கண்காட்சி

(கோப்பாய்)

வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தின் கல்விக்கண்காட்சி நேற்றும் இன்றும் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்று வருகிறது.

ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தெல்லிப்பழைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் கா.சந்திரபாலனும் சிறப்பு விருந்தினராக வலிகிழக்கு அரசியல் துறைப்பொறுப்பாளர் எஸ்.யாழவனும் கலந்து கொள்கின்றனர். (உ-79)

### வீடியோப் படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு வழங்கி வரும் திரைப்படக்காட்சித் தொடரில் பாலு மகேந்திராவின் ஒளிப்பதிவில், கே. என்.சேதுமாதவனின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட ''சட்டைக்காரி''என்னும் மலையாள மொழித் திரைப்படம், தமிழ் உபதலைப்புக்களுடன எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மு.ப 10.00மணிக்குக் காண்பிக்கப்படவுள்ளது. ஆர்வலர்கள் எவரும் கலந்து கொண்டு பயன் பெறமுடியும். (த)

# ஆயுதக் கொள்வனவுக்கான கேள்விப் பத்திரங்கள் பகிரங்கமாகக் கோரப்படும்

## ஊழலைத் தவிர்ப்பதற்காக அமைச்சரவை கூடித் தீர்மானம்

(கொழும்பு)

பாதுகாப்புப் படைகளுக்கு ஆயுதங்களைக் கொள்வனவு செய்வது தொடர்பான கேள்விப்பத்திர நடைமுறைகளை வெளிப்படையான முறையில் மேற்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கடந்த செவ்வாயன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான கேள்விப்பத்திர சபை ஒன்றும் நியமிக்கப்பட்டன.

இச்சபையில் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, மின்சக்தி எரிபொருள் அமைச்சர் கரு ஜெயசூரிய, நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இவை தவிர கடந்த காலத்தில் குறிப்பாக பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்ட போது, பாரிய ஊழல்கள் இடம் பெற்றதுடன், பாதுகாப்புத் துறை சார்ந்த முக்கியஸ்தர்கள் மாத்திரம் அன்றி வேறு பல அமைச்சர்களும் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டதாகவும், இதனாலேயே இராணுவ நடவடிக்கைகள் தோல்வியைத் தழுவியதாகவும், இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனையடுத்து, எதிர்காலத்தில் இதுபோன்ற ஊழல் மோசடிச் சம்பவங்களைத் தவிர்ப்பதற்கு உச்சக் கட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும், இதற்குச் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் ஒத்துழைக்க வேண்டும் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கேட்டுக்கொண்டார். (உ-10)



இராமநாதன் கல்லூரியில் அமைந்துள்ள இராமநாதேஸ்வரர் ஆலய கும்பாபிஷேகத்தின் போது எடுக்கப்பட்ட படம்.

*(படம்:- அன்ரன் சிங்கராஜன்)*



மல்லாகம் மகா வித்தியாலய கணித மன்றத்தினரால் நடத்தப்பட்ட பெருக்கல் வாய்ப்பாடு மனனப் போட்டியில் வென்ற செல்வன் ச.சர்வகுமாருக்கு வைத்திய கலாநிதி திருமதி ருக்மணிராஜா தங்க ஏணி விருதினை வழங்குகின்றார்.





ஹற்றன் நஷனல் வங்கியின் சுன்னாகக் கிளை பெரியவிளான் விவசாய சம்மேளனத்தைச் சேர்ந்த 21 கொடி முந்திரிகைச் செய்கையாளர்களிற்கு ரூபா 10 லட்சம் பெறுமதியான கடன்வழங்கும் திட்டத்தை அமுலாக்கியுள்ளது.

இக்கடன்வழங்கும் வைபவத்தில், வங்கியில் பிராந்திய சிரேஷ்ட முகாமையாளர் சு.சோதிலிங்கம் கடன் பத்திரங்களைக் கையளிப்பதையும், அருகில் வங்கியின் சுன்னாகம் கிளை முகாமையாளர் சி.சுந்தரேஸ்வரன், விவசாய அலுவலர் க.முரளீதரன் ஆகியோர் நிற்பதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.


# கேள்வி அறிவித்தல்

## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

1. யாழ்ப்பாண மாவட்ட செயலாளரினால் பின்வரும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| வேலை விபரம் | ஆகக் குறைந்த (ICTAD) தரம் | மீளளிப்புச் செய்யக்கூடிய வைப்புத்தொகை | மீளளிக்க முடியாத தொகை |
|---|---|---|---|
| கல்வியங்காடு பொதுச் சந்தை புனரமைத்தல் | M6 | Rs.70.000/- | Rs.750/- |

2. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரத்தில் ஒப்பந்தக்காரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
3. இக்ராட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கேள்வி ஆற்றலளவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
5. கேள்வி ஆவணத் தொகுதிகளை யாழ்ப்பாணம் புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் மீளளிப்புச் செய்யக்கூடிய வைப்புத்தொகையாக ரூபா 70, 000/- மும், மீளளிக்கமுடியாத தொகையாக ரூபா 750/- ஐயும் செலுத்தி 2003.09.18 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
6. கேள்வி ஆவணத் தொகுதிகளை (இணைப்பிரதிகளில்) யாழ்ப்பாணம் புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் எல்லா அலுவலக நாட்களிலும் அலுவலக நேரங்களிலும் இலவசமாகப் பார்வையிடலாம்.
7. பொறிவைத்த கேள்விகளைக் கொண்ட தபாலுறையில் இடதுபக்க மேல் மூலையில் ''கல்வியங்காடு பொதுச்சந்தை புனரமைத்தல்'' என எழுதப்படல் வேண்டும்.
8. பொறியிடப்பட்ட கேள்விகள் ''தலைவர், யாழ். மாவட்டக் கேள்விச் சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.'' என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் 2003.09.19ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்பாக எங்களுக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். அல்லது இதே முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். இதன் பின்னர் கேள்விகள் 2003.09.19 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்குத் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விகள் இடுவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் இருவருக்கு மேற்படாமல் சமுகமளிக்க முடியும்.
9. பொறியிடப்பட்ட கேள்விப் பெட்டி திட்டப்பணிப்பாளரின் அறையில் வைக்கப்பட்டிருக்கும்.

*மாவட்ட கேள்விச்சபை,*
*மாவட்டச் செயலகம்,*
*யாழ்ப்பாணம்.*
*04.09.2003*

(C/6618)

*செ.பத்மநாதன்,*
*தலைவர்,*
*மாவட்ட கேள்விச்சபை,*
*யாழ்ப்பாணம்.*



# கேள்வி அறிவித்தல்

## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

1. யாழ்ப்பாண மாவட்ட செயலாளரினால் பின்வரும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| வேலை விபரம் | ஆகக் குறைந்த (ICTAD) தரம் | மீளளிப்புச் செய்யக்கூடிய வைப்புத்தொகை | மீளளிக்க முடியாத தொகை |
|---|---|---|---|
| குருநகர் மாடிவீட்டுக் கட்டிடங்களுக்குச் செய்யவேண்டிய அத்தியாவசிய திருத்தவேலைகள் | M7 | Rs.40.000/- | Rs.750/- |

2. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரத்தில் ஒப்பந்தக்காரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
3. இக்ராட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கேள்வி ஆற்றலளவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
5. கேள்வி ஆவணத் தொகுதிகளை யாழ்ப்பாணம் புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் மீளளிப்புச் செய்யக்கூடிய வைப்புத்தொகையாக ரூபா 40, 000/- மும், மீளளிக்கமுடியாத தொகையாக ரூபா 750/- ஐயும் செலுத்தி 2003.09.17 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
6. கேள்வி ஆவணத் தொகுதிகளை (இணைப்பிரதிகளில்) யாழ்ப்பாணம் புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் எல்லா அலுவலக நாட்களிலும் அலுவலக நேரங்களிலும் இலவசமாகப் பார்வையிடலாம்.
7. பொறிவைத்த கேள்விகளைக் கொண்ட தபாலுறையில் இடதுபக்க மேல் மூலையில் ''குருநகர் மாடிவீட்டுக் கட்டிடத்தின் அத்தியாவசிய வேலைகள்'' என எழுதப்படல் வேண்டும்.
8. பொறியிடப்பட்ட கேள்விகள் ''தலைவர், யாழ். மாவட்டக் கேள்விச் சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.'' என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் 2003.09.18ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்பாக எங்களுக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். அல்லது இதே முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். இதன் பின்னர் கேள்விகள் 2003.09.18 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்குத் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விகள் இடுவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் இருவருக்கு மேற்படாமல் சமுகமளிக்க முடியும்.
9. பொறியிடப்பட்ட கேள்விப் பெட்டி திட்டப்பணிப்பாளரின் அறையில் வைக்கப்பட்டிருக்கும்.

*மாவட்டக்கேள்விச்சபை,*
*மாவட்டச் செயலகம்,*
*யாழ்ப்பாணம்.*
*04.09.2003*

(C/6619)

*செ.பத்மநாதன்,*
*தலைவர்,*
*மாவட்ட கேள்விச்சபை,*
*யாழ்ப்பாணம்.*

## இன்று ஒரு தகவல்

# புத்தியைத் தீட்டுங்கள்

"கத்தியைத்தீட்டாதே... புத்தியைத்தீட்டு!" என்று ஒரு பெரியவர் புத்தி கூறினார். அதைக்கேட்ட ஒரு இளைஞன் அது எப்படி பெரியவரே புத்தியைத் தீட்டுவது? கத்தியைத் தீட்டு என்று கூறினால் கருங்கல்லில் தீட்டலாம். புத்தியைத் தீட்டு என்று கூறினால் எப்படி? தலையைக் கொண்டு போய் தரையில் தேய்த்துக்கொண்டிருக்க முடியுமா? என்றான். அந்தப் பெரியவர் உடனே புரிந்து கொண்டார். இந்த இளைஞனுக்குப் புத்திக் கூர்மை குறைவு என்று.

அது சரி... அறிவுக்கும் புத்திசாலித்தனத்துக்கும் என்ன வித்தியாசம்? இது ஒரு முக்கியமான கேள்வி. இந்தக் கேள்வியை சோக்கிரட்டீஸிடம் அவரது சீடன் ஒருவன் கேட்டானாம். "ஐயா... அறிவுக்கும் புத்திசாலித்தனத்திற்கும் என்ன வித்தியாசம்?" என்று. சோக்கிரட்டீஸ் அந்தச் சீடனை நிமிர்ந்து பார்த்தார். அதன் பின் அவனிடம் "நீ ஒரு காரியம் செய்ய வேண்டும்" என்றார். "என்ன செய்ய வேண்டும்? கூறுங்கள்!" என்றான் சீடன். "அதோ அங்கே ஒரு பெரியவர் இருக்கின்றார். இங்கிருந்து பக்கத்தில் இருக்கும் அந்தக் கிராமத்திற்கு போய்ச் சேர எவ்வளவு நேரம் ஆகும்? எனக் கேட்டுவா! என்றார் சோக்கிரட்டீஸ்.

இவனும் "சரி"! என்று கூறிவிட்டுப்போய் அந்த முதியவரிடம் போய் நின்றான். "பெரியவரே இங்கிருந்து தெரிகிறதே அந்தக் கிராமத்திற்குப் போய்ச் சேர எவ்வளவு நேரம் ஆகும்? என்று கேட்டான். பெரியவர் நிமிர்ந்து பார்த்தார். ஆனால் பதில் ஏதும் கூறவில்லை. இவன் மீண்டும் அதே- கேள்வியை அவரிடம் கேட்டான். அப்பொழுதும் அவர் பதில் கூறவில்லை. உடனே இவன் மனதுக்குள் முடிவு செய்து கொண்டான். 'சரி ... பெரியவர் ஒரு மாதிரியாகத் தெரிகிறார். புத்தி சுவாதீன மற்றவர் போல் தெரிகின்றது என எண்ணிக்கொண்டு வந்த வழியே திரும்பி நடந்தான்.

சிறிது தூரம் நடந்திருப்பான். அப்போது அந்தப் பெரியவர் " இளைஞனே! இப்படி வா என்று அழைத்தார். இவ னுக்கோ ஒன்றும் புரியவில்லை. மறுபடியும் திரும்பி நடந்தான். அவர் முன் போய் நின்றான். பெரியவர் கூறினார். தம்பி நீ இங்கிருந்து அந்தக் கிராமத்திற்குப் போய்ச் சேர ஐந்து நிமிடங்கள் ஆகும்" என்றார். இளைஞன் அந்த முதியவரை ஒரு மாதிரியாகப் பார்த்தான். கொஞ்சம் யோசித்தான் பிறகு அவரிடமே கேட்டு விட்டான். "பெரியவரே இந்தப் பதிலை அப்பொழுதே என்னிடம் கூறியிருக்கலாமே! என்னைத் திரும்பிப்போக விட்டு மறுபடி கூப்பிட்டு அதற்குப் பின்பு இப்படிக் கூறுகின்றீர்களே! இது நியாயமா?" என்றான்.

பெரியவர் சிரித்து விட்டு இப்படிக் கூறினார். ஏனப்பா! நீ எவ்வளவு வேகமாக நடக்கின்றாய் என்பதைப் பார்க்காமல் நீ கிராமத்திற்குப் போய்ச் சேரக்கூடிய நேரத்தை எப்படி என்னால் சொல்ல முடியும். அதனால் தான் உன்னைச் சிறிது தூரம் நடக்க விட்டு உனது நடை வேகம், அந்தக் கிராமம் இருக்கும் தூரம் இரண்டையும் கணக்கிட்டு நேரத்தைக் கூறினேன்!" என்றார்.

சீடன் தலை குனிந்தான். அப்படியே திரும்பி வந்து நின்றான். சோக்கிரட்டீஸ் கூறினார். "தம்பி இதற்குப் பெயர் தான் புத்திசாலித்தனம்" இந்த அறிவுக் கூர்மை எல்லா இளைஞர்களுக்கும் வரவேண்டும் என்பதற்காகத்தான் "கத்தியைத் தீட்டாதே புத்தியைத் தீட்டு" என்று பெரியவர்கள் கூறுகின்றனர். புத்தியைத் தீட்டுகின்றவர்கள் வாழ்வில் பெரிய அறிவாளியாகின்றனர் தீட்டாதவர்கள் கோமாளியாகின்றார்கள்.

இந்தக்காலத்து ஆசாமி ஒருவர் இன்னொருத்தரைப் பார்த்துக் கேட்டார். "ஒரு விமானம் இங்கிருந்து 2 மணித்தியாலத்தில் லண்டன் போய்ச் சேர்கின்றது என்றால் எனது வயது என்ன?" என்று கேட்டார். அதற்கு இவர் "அப்படி என்றால் உங்கள் வயது 20 என்றார். எப்படி இவ்வளவு சரியாகக் கூறினீர்கள்? என்று கேட்டார் அவர். அதற்கு இவர் வேறு ஒன்றுமில்லை எங்கள் வீட்டிற்குப் பக்கத்து வீட்டில் முழுப்பைத்தியம் ஒன்று இருக்கின்றது. அதன் வயது 40 என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தமிழ்க் கட்சிகளுக்கு பாதுகாப்பு வழங்க மட்டு. இணைப்பதிகாரி இணக்கம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கி வரும் தமிழ்க் கட்சிகளுக்கு பாதுகாப்பு வழங்க படைத்தரப்பு இணக்கம் தெரிவித்துள்ளதாக சம்பந்தப்பட்ட கட்சிகளின மாவட்ட அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி ஈ.பி.டி.பி. உறுப்பினர் எஸ். பரணீதரன் கூறுகையில்,

மட்டக்களப்பு மாவட்ட புதிய இணைப்பதிகாரியை ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) ஆகிய கட்சிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசியபோது புதிய இணைப்பதிகாரி எம்மிடம் இந்த உறுதிமொழியை அளித்துள்ளார்.

மேலும், எமது கட்சி அலுவலகங்களுக்கு 12 பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளுக்காக நியமிக்கப்பட்ட போதும் இந்தப் பாதுகாப்பு திருப்திகரமானதாக இல்லை.

எனவேதான், தமிழ்க்கட்சிகளின் அமைப்பாளர்கள் படையினரின் பாதுகாப்பைக் கோரியுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-10)

# போசனையுள்ள மதிய உணவை மாணவர்களுக்கு வழங்க வேண்டும்

## ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சிடம் கோரிக்கை

(உடுவில்)

பாடசாலைகளில் கல்வி கற்கின்ற அனைத்து மாணவர்களுக்கும் போஷணையுள்ள மதிய உணவை வழங்க வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள 15 ஆசிரியர் சங்கங்களை இணைத்து இயங்குகின்ற இலங்கை ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் அண்மையில் கல்வி அமைச்சரைச் சந்தித்து தமது பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடினர்.

அத்துடன்,10 கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றினையும் சமர்ப்பித்தனர். அதிலேயே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஏனைய கோரிக்கைகளாவன;

* ஆசிரிய இடமாற்றச் சபைகளினால் செய்யப்படாத இடமாற்றங்களை ரத்துச் செய்வதுடன், ஆசிரிய இடமாற்றங்களை தன்னிச்சையாக ரத்துச் செய்ய வலயக் கல்விப்பணிபபாளர்களுக்கு இடமளிக்கக்கூடாது.
* ஆசிரியர் தரக் கணிப்பீட்டு முறையை நிறுத்த வேண்டும்.
* யுததத்தினால் இடம்பெயர்ந்து மீளக் குடியேறும் சகலருக்கும், வருமானத்தைக் கணக்கில் எடுக்காது மீள் குடியேற்றக் கொடுப்பனவாக 25 ஆயிரம் ரூபாவை வழங்க வேண்டும்.
* அரச ஊழியருக்கு 5 வருடச் சம்பளம் அல்லது ஆகக்கூடிய தொகை 5 லட்சம ரூபாவை வீடு கட்டுவதற்கு வட்டியில்லாக் கடனாக அல்லது மிகக் குறைந்த வட்டியுடன் வழங்க வேண்டும்.
* சேவைக்கால ஆலோசகர்களுக்கு கொடுப்பனவுகளை, வடக்கு-கிழக்கு உட்பட சகல மாகாணங்களுக்கும் ஒரே தொகையை வழங்க வேண்டும். (ஏனைய மாகாணங்களுக்கு ஆயிரத்து 500 ,2ஆயிரம்,3 ஆயிரம் என்ற அடிப்படையில் வழங்கப்படுகிறது. வடக்கிற்கு 500 ரூபா மட்டும் தற்போது வழங்கப்படுகிறது).
* 20 புள்ளிகளைப் பெற்ற அனைவரையும் ஆசிரிய சேவை தரம் 1ற்குள் உள்ளீர்ப்புச் செய்ய வேண்டும்.
* திஸ்ஸ தெய்வேந்திர எக்க நாயக்க ஆணைக் குழுக்களின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதுடன, அதிலுள்ள குறைபாடுகள் தொடாபாக எமது ஆலோசனைகளை ஏற்று நாணயக்காரக்குழு மூலம் நிவிர்த்தி செய்யவேண்டும்.
* தமிழ் மொழி மூலம் பாடசாலைகளில் உள்ள ஆசிரியர் பற்றாக் குறைகளை நீக்க உடன் 5ஆயிரம் ஆசிரிய நியமனங்களை வழங்க வேண்டும். ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட 1999ஆம் ஆண்டு பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் 500 பேரை அதிபர் சேவைக்கு நியமிக்க வேண்டும்.
* 2002இல் நடைபெற்ற கல்வி நிர்வாக சேவை பரீட்சைப் புள்ளியை வெளியிட்டு வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். (உ)

## இராசி பலன்

**05.09. 2003**

**(ஆவணி 19,வெள்ளி)**

**தசமி - பி.இ. 3.11 வரை**

**மூலம் - மு.இ. 6. 11 வரை**

**இராகுகாலம் - 10.34- 12.04**

**சுபநேரம் - 6.04 - 7.34**

**அமிர்த சித்தம், ஆவணி மூலம்**

**மேடம்**
புதிய திட்டமிடல், பிரயாணம், உறவினர் சந்திப்பு, போசன சுகம்.

**இடபம்**
காரிய தடங்கல், நண்பர்கள் விரோதம், பிறருக்குஉதவுதல், உடல்நலக் குறைவு.

**மிதுனம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, உறவினர் உதவி, தொழில் லாபம், போசன சுகம்.

**கடகம்**
தேக நலம், தொழில்முன்னேற்றம், பொருள் சேர்க்கை, சுவாரஸ்யம்.

**சிங்கம்**
வியாபார விருத்தி, குடும்பக்கவலை, காரிய தாமதம், புதிய சிந்தை.

**கன்னி**
மாதாவழிஉறவு, திடீர்பயணம் வேலையில் ஆர்வம், முயற்சி தாமதம்.

**துலாம்**
தடைப்பட்ட காரியம் கைகூடும், தனவரவு, புதிய சம்பவம், அந்நியர் சந்திப்பு.

**விருச்சிகம்**
அதிக வார்த்தை, வீண் செலவு, முயற்சி தாமதம், உடல் நலக்குறைவு.

**தனுசு**
தெய்வ சிந்தை, நல்ல முயற்சி, பெரியோரால் மதிக்கப்படல்,போசன சுகம்.

**மகரம்**
பிரயாணக்கஷ்டம்,உறவினர் சந்திப்பு, காரிய தாமதம், கௌரவக் குறைவு.

**கும்பம்**
தெய்வ தரிசனம், முயற்சி கைகூடும், பெருமையடைதல், தன லாபம்.

**மீனம்**
அதிக பிரயாசை , எடுத்த கருமங்கள் கைகூடும், கௌரவமான நிலை, மேன்மை.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

## சுகாதார அதிகாரிகள்

# தீவக ஆஸ்பத்திரிகளின் நிலைமையைப் பார்வை

(வேலணை)

ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலை, வேலணை அரசினர் வைத்தியசாலை என்பனவற்றை திருகோணமலையில் இருந்து வந்த சுகாதார அதிகாரிகள் கொண்ட குழுவொன்று பார்வையிட்டுள்ளது.

இவ்விரு வைத்தியசாலைகளிலும் நிலவும் குறைபாடுகளை, அங்கு கடமையாற்றும் ஊழியர்களிடமும், நோயாளர்களிடமும் மற்றும் பொது மக்களிடமும் இக்குழு கேட்டறிந்தது.

இவ் வைத்தியசாலைகளில் பல குறைபாடுகள் இருப்பதை அவர்கள் கண்டறிந்ததுடன், இவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் கூறியுள்ளனர்.

இதேவேளை, புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலைக்கு வெகு விரைவில் நிரந்தர வைத்திய அதிகாரி ஒருவர் நியமிக்கப்படவுள்ளார். (உ-47)

# கலந்துரையாடல்

(ஏழாலை)

வலி .வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வரும் மக்களின் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று வெள்ளிக் கிழமை பி.ப. 4.00 மணிக்கு வலிகாமம் கோட்ட அரசியல் துறை செயலகத்தில் நடைபெறவுள்ளதால் அனைத்து நலன்புரி நிலைய நிர்வாகிகளையும் இக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு நலன்புரி நிலையங்களின் சமாசத் தலைவர் கேட்டுள்ளார். (உ-12)

# காவலூருக்கான பேருந்து சேவையை ஆரம்பிக்குக!

(வேலணை)

சாட்டியூடாக ஊர்காவற்றுறைக்குச் செல்லும் 779ஆம் இலக்க பேருந்துச் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு சாட்டி, செட்டிபுலம், மண்கும்பான் பள்ளிவாசல் பகுதி மக்கள் வடபிராந்திய போக்குவரத்துச் சபை அதிகாரிகளைக் கேட்டுள்ளனர்.

மேற்படி பகுதிகளில் அதிகளவு மக்கள் மீளக்குடியேறி வருவதனால் பேருந்துச் சேவையின் அவசியம் பற்றி வலியுறுத்தப்படுகின்றது.

வேலணை அம்மன் கோவில் வீதியூடாக குறிகாட்டுவான் செல்லும் பஸ் சேவையினையும் மீண்டும் ஆரம்பிக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது. (உ-47)

# கிராமங்களுக்கு ஒளியூட்ட சூரிய சேமிப்புக் கலங்கள்

## கடனடிப்படையில் விநியோகிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் மின்சாரம் கிடைக்காது அல்லலுறும் கிராமப்புறப் பகுதி மக்களின் வாழ்வை ஒளியூட்டவென வெளிநாட்டு நிறுவனம் ஒன்று அவர்களுக்கு கடனடிப்படையில் சூரிய சேமிப்புக் கலங்கள் வழங்குவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

மேற்படி கிராமங்களில் மின்சார வசதியின்றித் தவிக்கும் மக்கள் அந்தந்த கிராம சேவையாளர் ஊடாக, இச்சூரிய சேமிப்புக்கலத்திற்கு விண்ணப்பிக்க முடியும்.

வெளிநாட்டு நிறுவனம் ஒன்றில் நிதி அனுசரணையுடன் கடனடிப்படையில் மேற்கொள்ளப்படவுள்ள இச் சேமிப்புக்கலங்களின் விநியோகத்தின்போது, அதன் பெறுமதியை முழுத் தொகையாகவோ, அன்றி மாதாந்த ரீதியாக பகுதி பகுதியாகவோ செலுத்த முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-7)

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும் - குறள்

## வலம்புரி

### சாரதிகளின் பொறுப்பு

அண்மைக்காலமாக வட பகுதியில் வீதி விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. இத்தகைய விபத்துக்களுக்கு வீதிகளில் காணப்படும் சேதமும், போக்குவரத்து நெரிசல்களும் காரணமாக அமையுமாயினும் அதற்கு மேலாக சாரதிகளின் அசமந்தப் போக்கும், அவர்களின் பொறுப்பற்றதன்மையும் முக்கிய காரணமாகும். குறிப்பாக இளம் சாரதிகளின் பொறுப்பற்ற தன்மை வாகன விபத்திற்கு அடிப்படைக் காரணமாக அமைந்துள்ளது.

வாகனச் சாரதிகள் மனித உயிர்களுடன் தொடர்புபட்டவர்கள்-வாகனங்களில் இருக்கின்றவர்கள் மட்டுமன்றி வீதிகளில் செல்பவர்களின் உயிரையும் பாதுகாக்கின்ற பொறுப்பும் சாரதிகளுக்கே உரியது. ஆனால், அதுபற்றிய சிந்தனை சாரதிகளிடம் அறவே இல்லை என்றே கூறவேண்டும்.

நேற்று முன்தினம் கிளிநொச்சி கரடிப்போக்கில் இடம்பெற்ற வாகன விபத்து அவதானக் குறைவினால் ஏற்பட்ட ஒரு துன்பகரமான நிகழ்வாகும். வாகன நெருக்கடியற்ற-வேகக்கட்டுப்பாடு உள்ள ஒரு பிரதேசத்தில் இரண்டு வாகனங்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியமையும், அதனால் மூவர் பலியானதும் நடந்து முடிந்த சம்பவங்கள்.

இத்தகைய சம்பவங்கள் வேகக்கட்டுப்பாடு இழந்த நிலையில் நடந்துள்ளதெனில் மனித உயிர்களை மதிக்கின்ற தன்மை சாரதிகளிடம் அறவே இல்லை என்ற செய்தி இதனூடே வெளிப்படுகின்றது.

வீதிகளுக்கு வாகனத்தைக் கொண்டுவரும் ஒவ்வொரு வரும் தனதும் பிறரதும் உயிர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு தன்னிடம் உண்டு என்ற மனநிலையோடு செயற்பட வேண்டும். அதனை விடுத்து தத்தம் மன வேகத்திற்கு ஏற்ப செயற்படுவார்களாயின் அது அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் பெரும் தீங்கை ஏற்படுத்தி விடும்.


இதனை உணராத வரை வீதிவிபத்துக்களை தவிர்ப்பது எவ்வகையிலும் முடியாத காரியமாகும். வீதிவிபத்துக்களால் ஏற்படக் கூடிய பாரதூரமான விளைவுகள் பற்றிய எச்சரிக்கைகளை எதுவும் தெரியாத நிலையில் விலைகொடுத்து வாங்கப்படும் சாரதி அனுமதிப் பத்திரங்கள் விதிவிபத்துக்களுக்கு தூண்டுதலாக இருக்கின்றது என்ற உண்மையை, மோட்டார் போக்குவரத்து திணைக்கள அதிகாரிகள் உணர்ந்து கொண்டு, லஞ்சம் பெற்று சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படும் மிகப் பெரும் கொடூர செயலை தடுக்க முன்வர வேண்டும்.

இதேவேளை கட்டிளமைப் பருவத்திலிருக்கும் இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் செல்லும் வேகம் யமனைத் தேடி ஓடுவது போல் காட்சி தருவதால் அவர்களும் பொறுப்புணர்ந்து நடந்து கொள்ள வேண்டும். இத்தகைய பொறுப்பை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்கு ஒவ்வொரு பாடசாலைகளும் நடவடிக்கை மேற்கொள்வது காலத்தால் செய்யும் பெருத வியாகும்.

# மனிதப் பிறவியின் உயர்ந்த பயன்கிட்ட ஆடல்வல்ல பெருமானை தரிசிப்போம்

வலக்கரத்தில் 'துடி' அல்லது உடுக்கையையும், இடக்கரத்தில் அக்கினியையும் ஏந்தி, மற்றொரு வலக்கரத்தால் அபய முத்திரைகாட்டி, அவ்வாறே மற்றொரு இடக்கரத்தால் தமது தூக்கிய திருவடியைக் காட்டி, தாண்டவக் கோலத்தில் காட்சிதருவார் நடராஜப் பெருமான்.

அரங்கத்தில் ஆடுவதால் இவரை சபாபதி என்றும் கூறுவர். தமிழில்



கூத்தப்பிரான் என்றும் திருச்சிற்றம்பலக் கூத்தர் என்றும் குறிப்பிடுவர்.

நடராஜப் பெருமானின் உடுக்கை, சிருஷ்டி அல்லது படைத்தலையும, அபயக்கரம் ஸ்திதி அல்லது காத்தலையும்,

மழு(அக்கினி), சம்ஹாரம் அல்லது அழித்தலையும்,

ஊன்றிய திருவடி திரோதானம் அல்லது மறைத்தலையும்,

தூக்கிய திருவடி அனுக்கிரஹம் அல்லது அருளுதலையும் குறிப்பால் உணர்த்துகின்றன. இந்த ஐந்தையும் பஞ்ச கிருத்தியம் அல்லது ஐந்தொழில் என்று திருமந்திரம் விளக்குகிறது.

நடராஜரின் திருவுருவத்தைச் சுற்றி அமைந்திருக்கும் திருவாசி பிரணவத்தின் வடிவாகும். திருவாசியில் தீச்சுடர்போல் தென்படும் அமைப்புகள் மந்த்ர மாத்ருகா அட்சரங்கள் என்னும் மூலமந்திர எழுத்துக்களை குறிக்கின்றன.

உலகத்தின் தோற்றம், இயக்கம் முதலான அனைத்தும் நடராஜ மூர்த்தத்தில் அடங்கியுள்ளன.

நடராஜரின் இடப்பக்கத்தில் நிற்பவளே 'சிவகாம சுந்தரி' என்று போற்றப்படும் அம்பிகையாவாள். எல்லாத் திருக்கோயில்களிலும் நடராஜர் சந்நிதி தெற்கு நோக்கியே அமைந்திருக்கும். பூஜைக்குரிய நடராஜர் திருமேனி பெரும்பாலும் பஞ்சலோகப் படிமமாகத்தான் இருக்கும்.

திருஞானசம்பந்தர் கொல்லி மழவன் மகளின் வலிப்புநோய் தீர்த்த பாச்சிலாச் சிரமத்து நடராஜரின் பாதத்தின் கீழே முயலகன் இல்லை.

தில்லை நடராஜர் சந்நிதியை அடைய ஐந்து படிகள் ஏறவேண்டும். அவை சிவபெருமானின் ஐந்தெழுத்தை உணர்த்தும் "பஞ்சாட்சரப் படிகள்" எனப்படும். தமது திருவாசகத்தின் பொருள் 'இவனே!' தில்லையம்பலவாணனைச் சுட்டிக்காட்டினார் மாணிகக வாசகர். தேவாரப் பதிகங்களும் தில்லையில் இருந்து எடுக்கப்பட்டே உலகிற்கு அளிக்கப்பட்டன. ஆகவே, மணிவாசகர் படிமமும் பன்னிரு திருமுறைகளும் நடராஜர் சந்நிதியில் இடம்பெறுதல் சிறப்புடையதாகும்.

இருபத்தேழு நட்சத்திரங்களில் இரண்டு மட்டுமே 'திரு' என்ற சிறப்பு அடைமொழியுடன் குறிப்பிடப்படுகின்றன. அவை திருவோணமும் திருவாதிரையுமே ஆகும். திருவோணம் திருமாலுக்கு உகந்தது. அவ்வாறே திருவாதிரை சிவபெருமானுக்கு-குறிப்பாக நடராஜப் பெருமானுக்கு-உகந்ததும், உரியதும் ஆகும். சிவபெருமானை 'ஆதிரையான்' என்றே அழைப்பதுண்டு.

மார்கழி திருவாதிரையில் மட்டுமே தில்லை நடராஜரும் மற்ற திருக்கோயில் நடராஜர்களும் வீதி உலாவாக எழுந்தருளுவார்கள். வேறு நாட்களில் வீதியுலா செல்வதில்லை.

திருக்கோயில்களில் ஆண்டுப் பெருவிழா நிறைவுக்கு அடுத்தநாள் தீர்த்த வாரிக்கு நடராஜர் தரிசனம் தருவார். எனினும், அப்போது மூலஸ்தான நடராஜர் எழுந்தருளுவதில்லை. அதற்கென சிறிய நடராஜ மூர்த்தம் வைத்திருப்பது வழக்கம்.

இறைவன் நடராஜராக ஆடிக்



கொண்டிருக்கும் சிதம்பரம், கனக சபை அல்லது பொன்னம்பலம் எனப்படும். அதுவே ஆகாயத்தலம் என்றும் விராட் புருஷனின் இதய ஸ்தானம என்றும் போற்றப்படுகிறது.

காரைக்கால் அம்மையார் போற்றிப் புகழ்ந்ததும், முத்தி எய்தியதும் ஆகிய திருவாலங்காடு என்ற திருத்தலம் இரத்தினசபையாகும்.

மதுரையில் அவன் ஆடும் சபை இரஜதசபை அல்லது வெள்ளியம்பலம் ஆகும்.

திருநெல்வேலியில் இறைவன் தாமிர சபையில் ஆடுகிறான்.

திருக்குற்றாலத்தில் அவன் ஆடும் சபை சித்திரசபையாகும்.

மாத்யந்த முனிவரின குமாரர் இறைவனின் தாண்டவத்தைக் காணத் தில்லை வந்தார்; தரிசனம் பெற்றார். இறைவனுக்குரிய புதுமலர்களை மரத்தில் ஏறிப் பறிக்க புலிக்காலை இறைவனிடம் வேண்டிப் பெற்றார். இவரே புலிக்கால் முனிவர் அல்லது வியாக்கிரபாதர் என்று பெயர் பெற்றார்.

தில்லையில் திருமால் கண்ட தாண்டவ தரிசனத்தை தாமும் காண விரும்பினார் ஆதிசேஷன் திருமாலின் அனுமதி பெற்றுத் தில்லை வந்தார். பாதி பாம்பு உருவத்துடன் இருக்கும் இவரே பதஞ்சலி முனிவரானார்.

இவ் இருவரும் ஆத்ம பூஜை செய்து இறைவனை வழிபட்டனர். அத்திருததலங்கள் முறையே திரும்புலீச்சரம் மற்றும் திருஅனந்தேச்வரம் என்று பெயர்பெற்ற திருக்கோயில்களாகும்.

தில்லையில் ஆடும் அழகனின் திருமுடியில் விடும் பால் முதலான அபிஷேகப் பொருட்கள் அவனது சிரத்திலிருந்து கரத்தின்வழியே தூக்கிய திருவடிகளில் வழிந்துவரும் அற்புதக் காட்சியைக் காணலாம்.

சோழர் காலத்தில் கல்வெட்டுக்கள் நடராஜரின் 'ஆடல்வல்லான்' என்று குறிப்பிடுகின்றன. 'ஆடலவல்லான் மரக்கால்' என்று அவர்கள்

**கே.சந்தானராமன்**

அளவைக் கருவிகளுக்குக் கூடப் பெயரிட்டிருந்தனர்.

சைவ உலகில் கோயில் என்றால் சிதம்பரத்தைத்தான் குறிக்கும். சித+அம்பலம் என்பது சிதம்பரம் என்றாயிற்று. அதனையே தூய தமிழில் 'திருச்சிற்றம்பலம்' என்கிறோம். புலிககால் பெற்ற வியாக்ரபாத முனிவர் பெரும் பற்றுடன் வழிபட்டதால் தில்லையை 'பெரும்பற்றப் புலியூர்' என்றும் அழைத்தனர். திருமுறைகளில் இப்பெயர் இடம்பெற்றுள்ளது.

நடராஜப் பெருமானது குனித்த புருவத்தையும், கோவைப்பழம் போல் சிவந்த வாயினையும், குமிழ்ச் சிரிப்பையும், பரந்து விரிந்த சடையையும், பால்போன்ற திருநீற்றையும், அருள்செய்ய மகிழ்ச்சியுடன் தூக்கிய திருவடியையும் காணும் பேறு வாய்க்கப்பெற்றால் மனிதப்பிறவியும் வேண்டத்தக்கதே என்கிறார் அப்பர் பெருமான்.

ஆகவே, நாம் எடுத்த மனிதப் பிறவியின் உயர்ந்த பயன்கிட்ட ஆடல்வல்ல பெருமானைத் தரிசித்து உய்வோமாக. □

## வெள்ளி நற்சிந்தனை

# அடுத்த தேர்தலில் இணைந்து போட்டியிடுமாறு ஸ்ரீ.மு.காங்கிரஸுக்கு ஐ.தே.க. அழைப்பு

(கொழும்பு)

அடுத்துவரும் தேர்தல்களில் தம்முடன் ஒன்றாகப் போட்டியிடுமாறு ஐக்கியதேசியக் கட்சி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு அழைப்பு விடுத்துள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தல்லவரும், கப்பல்துறை துறைமுக அபிவிருத்தி அமைச்சருமான ரவூப்ஹக்கீம் தலைமையிலான தூதுக்குழு நேற்று முன்தினம் அலரி மாளிகையில் ஐக்கியதேசியக் கட்சியின் முக்கியஸ்தர்களைச் சந்தித்துப் பேசியபோதே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த வேண்டுகோள் குறித்து அரசியல் பீடத்துடன் ஆராய்ந்த பின்னரே இதுபற்றிய இறுதித் தீர்மானத்தை எடுக்க முடியும் என அமைச்சர் ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்தே போட்டியிடும் என அதன் அரசியல் உயர் பீடத்தில் ஏற்கனவே தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவை தவிர, நேற்று முன்தினம் அலரி மாளிகையில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சிக்கும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கும் இடையிலான இச்-சந்திப்பில் மேற்படி இரு கட்சிகளுக்கும் இடையில் சில பிர தேசங்களில் போட்டியிடுவது தொடர்பில் ஏறபட்டுள்ள பிணக்குகளைத் தீர்த்து நல்லுறவைக் கட்டியெழுப்பு வதற்கான குழுவொன்றும் நியமிக் கப்பட்டிருப்பதாகத் தெரி விக்கப்படுகிறது. (உ-10)

## தினசரி தியானம்

### விதியை உருவாக்குபவர்

ஒரு மனிதனுக்கு வேறுபட்ட செய்கைகள் வேறுபட்ட முடிவுகளைத தருகின்றன. இம் முடிவுகள் வேறுபட்ட உடல்களையும் உருவங்களையும் தருகின்றன. எனவே இச் செயல்களின் பயனாக மனிதன் நன்மையும் தீமையும் உடைய அனுபவங்களைப் பெறுகின்றான். ஆசை காரணமாகச் செய்யப்படும் செயல் அனைத்தும் அவனைக் கட்டுப்படுத்தி விடுகின்றன.

நாம் இப் பிறப்பில் பார்ப்பதனைத்தும் முற்பிறவிகளின் பயனே என வேதங்கள் கூறுகின்றன. நேர்மையான வழியிலும் முறையிலும் கடினமாக உழைக்காவிட்டால் அவரவர் விதியை அவரவரே உருவாக்கிக் கொள்கிறார்கள்.

சுவாமி சிவானந்தர்

# மீளக் குடியமர்வுக் கொடுப்பனவை 13,375 குடும்பங்கள் பெற்றன

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களில் 25ஆயிரம் ரூபா மீள் குடியமர்வுக் கொடுப்பனவுக்கென இனங்காணப்பட்ட 13ஆயிரத்து 375 குடும்பங்களுள் இதுவரை 2ஆயிரத்து 405 குடும்பங்களுக்கு மட்டுமே இக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதென தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் தெரிவித்துள்ளார்.

மீதியாகவுள்ள 10ஆயிரத்து 970 குடும்பங்களுக்கும் மேற்குறித்த மீள் குடியமர்வுக் கொடுப்புனவை வழங்குவதற்குப பெருந்தொகை நிதி தேவைப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-16)

# சட்டவிரோதமாக இலங்கை வந்த ஆயிரத்து 85 பேர் தடுத்துவைப்பு

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் வெளிநாடு செல்வதற்காக இலங்கை வந்தபோது கைது செய்யப்பட்டவர்களை சொந்த நாடுகளுக்குத் திருப்பி அனுப்புவதற்கான நடவடிக்கைகளை எடுத்திருப்பதாக உள்துறை அமைச்சின் செயலாளர் எம்.என். யுனைட் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுத் தூதுவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்தே இத் தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

இது தொடர்பாக இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் நாட்டுத் தூதுவர்களுடன் நீண்டகாலப் பேச்சுவார்த்தை இடம் பெற்றதாகவும், கடந்த வருடம் சட்டவிரோதமாக இலங்கை வந்த ஆயிரத்து 85 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-8)

## கொல்களம் அமைப்பதற்கு எதிர்ப்பு

(கோப்பாய்)

கோப்பாய் கந்தன்காடு மயானத்தை அண்மித்த சூழலில் கொல்களம் அமைக்கப்படுவதற்கு அப்பகுதிப் பொது அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்துள்ளன.

சாவகச்சேரி,மானிப்பாய் பிரதான வீதியோரமாக இக்கொல்களம் அமைககப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (உ-79)

# ஐ.நா.விசேட அமர்வில் உரையாற்ற ஜனாதிபதி அனுமதி கோரவில்லை

## சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்க முயல்கிறது ஜனாதிபதி செயலகம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அமைப்பின் எயிட்ஸ் நோய் தொடர்பான விசேட அமர்வின் போது உரையாற்ற சந்தர்ப்பம் வழங்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அனுமதி கோரவில்லையென ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

எனினும், இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்கான அழைப்பினை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளா கோபி அனான் ஜனாதிபதிக்கு விடுத்துள்ளார் என்றும் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ள இவ் அமர்வில் உரையாற்றுபவர்களின் பெயர்ப்பட்டியலில் இலங்கை வெளிவிவகார அமைச்சரின பெயரும் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட தகவல் குறித்து ஜனாதிபதி அதிருப்தி அடைந்திருப்பதாகவும் தகவல் வெளியாகியமை குறித்தே ஜனாதிபதி செயலகம் இம் மறுப்பு அறிக்கையை வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான், கடந்த ஜீலை மாதம் 23 ஆம் திகதி ஜனாதிபதிக்கு அழைப்பினைக் கடிதம் மூலமாக விடுத்துள்ளார் என்றும் அந்த அழைப்பிதழ் கடிதம் ஜனாதிபதி செயலகத்திற்குக் கிடைக்கவில்லையென்றும் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அமர்வில் நான் கலந்து கொள்ளவிருந்த போதும் தான் கலந்து கொள்ளப் போவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பத்து நாட்களுக்கு முன்னா் தமது வேண்டுகோளை ஐ.நா. சபைக்கு அனுப்பி வைத்துள்ளார்.

ஜனாதிபதிக்கும் அரசுக்கும் இடையிலான முறுகல் நிலைய்ய சர்வதேச சமூகத்திற்கு முன் கொண்டு செல்லக் கூடாது என்பதற்காக ஐ.நா.சபையில் இடம்பெறவுள்ள குறிப்பிட்ட அமர்விலிருந்து விலகிக்கொள்ள நான் தீர்மானித்துள்ளேன்.

ஐ.நா.சபைக்கு தமது வேண்டுகோளை அனுப்புவது தொடர்பாக வெளிவிவகார அமைச்சுக்கு ஜனாதிபதி எந்த விதத் தகவல்களையும் வழங்கவில்லை என்று இது விடயமாக டிரோன் பெர்ணான்டோ கருத்து வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

(உ-8)

# விளையாடிக் கொண்டிருந்த சிறுவனைக் காணவில்லை

## பருத்தித்துறையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வீதி ஓரமாக விளையாடிக் கொண்டிருந்த சிறுவனைக் காணவில்லையென யாழ். மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச் சம்பவம் கடந்த மாதம் 6 ந் திகதி பருத்தித்துறை மாவிலங்கையடி எனும் இடத்தில் நடைபெற்றது.

சம்பவத்தில் திருகோணமலையைச் சேர்ந்த தேவசகாயம் ஜேசுதாஸ் (வயது-13) என்ற சிறுவனே காணாமல் போனவராவார்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

திருகோணமலையைச் சேர்ந்த பிரஸ்தாப சிறுவன், வைபவம் ஒன்றுக்காக பருத்தித்துறையிலுள்ள மாமனார் வீட்டுக்கு வருகை தந்திருந்தார்.

சம்பவ தினமன்று வீதி ஓரமாக விளையாடிக்கொண்டிருந்த சிறுவனை அங்கு காணவில்லை. இதனையடுத்து எங்கு தேடியும் சிறுவனைக் கண்டு பிடிக்க முடியவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-4)

# வடமராட்சி கடலில் அகழி தோண்ட நிதி ஒதுக்கீடு

(திருநெல்வேலி)

கடற்தொழிலில் ஈடுபடும் வடமராட்சிப் பகுதி மீனவர்களின் படகுகளை நங்கூரமிடுவதற்குக் கடற்கரையில் ஐந்து அகழிகளைத் தோண்டுவதற்கு 25 இலட்சம் ரூபாவை யாழ்.செயலகம் ஒதுக்கீடு செய்துள்ளது.

வடமராட்சி கடற்கரைப் பகுதிகளில் மீன்பிடிப்படகுகளைத் தரித்து விடுவதற்கு 20 அகழிகளைத் தோண்டுமாறு வடமராட்சி மீனவர் சமாசம் கோரிக்கை விடுத்திருந்தது.

எனினும் 5 அகழிகளைத் தோண்டுவதற்கே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மேற்படி விடயம் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் ஒன்று யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

(த-43)

# எரிபொருட்களின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

எரிபொருட்களின் விலை நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இவ் விலை அதிகரிப்பின்படி ஒரு லீற்றர் பெற்றோல் 54 ரூபாவாகவும், ஒரு லீற்றர் டீசல் 31 ரூபா 50 சதமாகவும், ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 25 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படவுள்ளதாகவும் பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. (வ)

## பொலிஸ் அதிகாரி சமுகமளிக்காததால்

# புலி உறுப்பினர் கைதான விசாரணை ஒத்திவைப்பு

(திருநெல்வேலி)

கடந்த செவ்வாய்க் கிழமை விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் முகமாலைச் சோதனைச் சாவடியில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்டமை தொடர்பாக நேற்று யாழ். மனிதவுரிமை ஆணைக் குழுவில் நடைபெறவிருந்த விசாரணை காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேற்படி விசாரணைக்கு கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அழைக்கப்பட்டிருந்த போதும் சம்பவம் பற்றி எதுவுமே தெரியாத பொலிசார் ஒருவர் விசாரணைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தார்.

இதனால் விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

இவ்விசாரணையில் விடுதலைப் புலிகள் சார்பில் ஊடகப் பொறுப்பாளர் இமயவன் கலந்து கொண்டார். (த-43)

---

## புலிகளின்...

பிரதிநிதிகள், அரச அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இம் மாநாட்டில் பங்குபற்ற விடுதலைப் புலிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

**புதியமுகாம் அமைப்பது பற்றி விசாரிக்க உத்தரவு**

விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களும், சர்வதேச சட்டவல்லுனர்களும் பரிஸில் கூடி ஆராய்ந்து தயா

# வட்டு. கண்ணகை அம்மன் கோவில் மீது இளைஞர்கள் கல்வீசித் தாக்குதல்!

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை கண்ணகை அம்மன் ஆலய வெளி வீதியை மூடி அடைக்கப்பட்டிருந்த வேலியை அப்பகுதி இளைஞர்கள் வெட்டி வீழ்த்தியதுடன் ஆலயத்தின் மீது கற்களை வீசித் தாக்கினர். இதனால் ஆலயத்தின் கூரை ஓடுகள் சேதமடைந்தன.

இச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றுள்ளது.

ஆலயத்திற்குச் சொந்தமான மேற்படி வீதிப் பகுதியில், அப்பகுதி இளைஞர்கள் மாலை நேரங்களில் விளையாட்டுக்களில் ... வந்தனர். 1997ல் மேற்படி ...

இதனால் மேற்படி விடயம் தொடர்பாக நீதிமன்றில் வழக்கு ஒன்றும் ஆலய நிர்வாகத்தினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நேற்று முன் தினம் மாலை ஆலயப் பகுதிக்குச் சென்ற இளைஞர்கள் 50 மீற்றர் தூரம் வரை வேலிக் கதிகால்களை வெட்டிச் சாய்த்ததுடன் ஆலயத்தின் மீதும் கற்களை வீசித் தாக்குதல் நடத்தினர்.

சம்பவம் தொடர்பாக இரண்டு தரப்பாலும் அன்றைய தினம் மாலை யாழ்.மாவட்ட அரசியல் துறையில் முறைப்பாடு ... மூன்று மணிமுதல் ஆறு மணி வரை ஆலய நிர்வாகத்தினருடனும் பின்னர் இளைஞர்களுடனும் கலந்துரையாடினார்.

இதில் ஆலயத்திற்குச் சொந்தமான பகுதியில் வேலியை மீண்டும் அடைப்பதற்கு தான் உறுதுணையாக இருப்பதாகவும் , அதேவேளை மேற்படி விடயம் தொடர்பாக வழக்கு ஒன்று இருப்பதால் வழக்குத் தீர்ப்பு வரும் வரை அமைதியைப் பேணுமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை 1995க்கு முன்னர் மேற்படி பகுதியில் வேலி ... என்பதும்

ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர். இம் மாநாட்டில் பங்குபற்ற விடுதலைப் புலிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

**புதியமுகாம் அமைப்பது பற்றி விசாரிக்க உத்தரவு**

விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர் களும், சர்வதேச சட்டவல்லுனர்க ளும் பரிஸில் கூடி ஆராய்ந்து தயா ரித்த இடைக்கால நிர்வாக சபை தொடா பான பதில் திட்டவரைபை இதுவரை விடுதலைப்புலிகள் எமக்கு அனுப்பி வைக்கவில்லை. இத்திட்ட வரைபை இன்னமும் மூன்று வார காலத்திற்குள நோர்வே மூலம் எமக்கு அனுப்பி வைப் பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே சர்ச்சைக்குள்ளாகியி ருக்கும் விடுதலைப் புலிகளின் குரங்கு பாஞ்சான் முகாமைத் தவிர இன்னு மொரு முகாம் அமைக்கப்படுவது தொடர் பான எந்தவிதமான தகவல்களும் அரசுக்கு கிடைக்கவில்லை. எனினும் இது தொடர்பான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு பாதுகாப்புப் படையி னருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என் றும் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். (வ)

---

## இளம் குடும்பப்...

பாலியல் பலாத்காரம் புரிய முயன் றுள்ளார்.

இதன்போது விழித்துக் கொணட பிரஸ்தாப பெண் சம்மந்தப்பட்ட சிப்பாயை கடுமையாகத் தாக்கியி ருக்கிறார். இதனால் சிப்பாய் அங்கிருந்து தப்பியோடியுள்ளார்.

மேற்படி சம்பவம் அப்பகுதிக் கடற்படை முகாம் பொறுப்பதிகாரி யின் கவனத்திற்கு கொண்டு வரப் பட்டது.இதனையடுத்து அப்பகுதி பொது மக்கள் முன்னிலையில் வைத்து பிரஸ்தாப சிப்பாயை முகாம் பொறுப்பதிகாரி கடுமை யான தண்டனைக்கு உட்படுத்தி னார்.

அத்துடன் மேற்படி சம்பவம் தொடர்பாக எவரிடமும் முறையிட வேண்டாம் என முகாம் பொறுப்பதி காரி அங்கு கூடியிருந்தவர்கள் முன்னிலையில் கூறியதுடன் இவ்வாறான சம்பவங்கள் இனிமேல் இடம்பெறாது பார்த்துக் கொள்வ தாகவும் உறுதியளித்துள்ளார். (த-43)

எதுவுமே தெரியாத பொலிசார் ஒருவர் விசாரணைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தார்.

இதனால் விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

இவ்விசாரணையில் விடுதலைப் புலிகள் சார்பில் ஊடகப் பொறுப்பாளர் இமயவன் கலந்து கொண்டார். (த-43)

# பெண் போராளி சாவடைந்தார்

(வன்னி)

கடந்த முதலாம் திகதி பெண் போராளி ஒருவர் கடற் பயிற்சியில் ஈடுபட்டிருந்த வேளையில் சாவடைந்துள்ளார்.லெப்டினட் கவிமொழி/ தாரணி என்றழைக் கப்படும் கள்ளப்பாடு முல்லைத்தீ வைச் சேர்ந்த குமரகுருபரன் ஜெயப்பிரியா எனும் போராளியே சாவடைந்தவர் ஆவார்.இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்து ள்ளனர். (உ-43)

## எரிக்சொல்ஹெய்ம் – ஹெல்கிசன் இலங்கை வருகை

(கொழும்பு)

நோர்வேயின் பிரதி வெளி விவகார அமைச்சர் விடார் ஹெல்கிசனும் விசேட சமாதான பிரதிநிதியான எரிக்சோல்கைமும் எதிர்வரும் 14ம் திகதி இலங்கை வரவுள்ளதாக நோர்வே தூதர கத்தின் இரண்டாவது செயலாளர் தோமஸ் ஸ்ராங்ளென் தகவல் வெளியிட்டுள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த் தைகளை மீண்டும் ஆரம்பிப்பதன் பிரகாரம் இலங்கை வரும் இவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் தயாரித்துள்ள இடைக்கால நிர்வாக சபைக்கான பதில் யோசனைகள் குறித்தும் இரு தரப்பினருடனும் ஆராய்வார்கள்.

அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான இச் சந்திப்புக்கான நேர அட்டவணை இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை எனவும் தோமஸ் ஸ்ராங்ளென் மேலும் தெரிவித்துள்ளார். (உ-10)

ஆலயத்தின் மீது கற்களை வீசித் தாக்கினர். இதனால் ஆலயத்தின் கூரை ஓடுகள் சேதமடைந்தன.

இச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றுள்ளது.

ஆலயத்திற்குச் சொந்தமான மேற்படி வீதிப் பகுதியில், அப் பகுதி இளைஞர்கள் மாலை நேரங்களில் விளையாட்டுக்களில் ஈடுபட்டு வந்தனர். 1997ல் மேற்படி வீதிப் பகுதியை மறித்து, ஆலய நிர்வாகத்தினரால் வேலி போடப் பட்டது. வேலி போடப்பட்டது முதல் பல தடவைகள் அப் பகுதி யில் விளையாடி வந்த இளைஞர் களால் வேலி வெட்டி வீழ்த்தப் பட்டது.

தினம் மாலை ஆலயப் பகுதிக்குச் சென்ற இளைஞர்கள் 50 மீற்றர் தூரம் வரை வேலிக் கதிகால்களை வெட்டிச் சாய்த்ததுடன் ஆலயத்தின் மீதும் கற்களை வீசித் தாக்குதல் நடத்தினர்.

சம்பவம் தொடர்பாக இரண்டு தரப்பாலும் அன்றைய தினம் மாலை யாழ்.மாவட்ட அரசியல் துறையில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி நேற்று மாலை மூன்று மணியளவில் சம்பவ இடத்திற்குச் சென்று சம்பந்தப்பட்ட தரப்பின ருடன் கலந்துரையாடினார்.

அடைப்பதற்கு தான் உறுதுணை யாக இருப்பதாகவும் , அதேவேளை மேற்படி விடயம் தொடர்பாக வழக்கு ஒன்று இருப்பதால் வழக்குத் தீர்ப்பு வரும்வரை அமைதியைப் பேணுமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை 1995க்கு முன்னர் மேற்படி பகுதியில் வேலி இருக்கவில்லை என்பதும் இளைஞர்கள் அப் பகுதியில் விளையாடி வந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-216)

# கலந்துரையாடலுக்கு அழைத்து கடற்படையினர் அவமதிப்பு

## கடற்றொழிலாளர் வெளிநடப்பு

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை கடற்படையி னருக்கும் அப்பகுதி கடற்றொழி லாளர்களுக்கும் இடையில் இடம்பெற்ற மாதாந்த சந்திப்பில் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்துக் கருத்துக் கூற முற்பட்ட கடற்றொழிலாளர் சங்கச்செயலாளரை அங்கிருந்த படையதிகாரிகள் கருத்து எதனை யும் கூறவிடாது தடுத்துள்ளனர்.

இதனால் கடற்றொழிலாளர் சங்கச் செயலாளரான சி.தனபால சிங்கம் கலந்துரையாடலில் இருந்து வெளிநடப்புச் செய்துள்ளார்.

இச்சம்பவம் பற்றி மேலும் கூறப் படுவதாவது, கடந்த 3 ஆம் திகதி 524வது படைத் தலைமையகத்தில் போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுவின் அனுசரணையுடன் நடைபெற்ற மேற்படி கலந்துரையாடலில். வல்வெட்டித்துறை கடற்தொழிலாளர் சங்கச் செயலாளர் தமது மீனவர் கள் தொழிலில் ஈடுபடும்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து படையதிகாரிகளுக்கு எடுத்து விளக்க முற்பட்டார்.

அவ்வேளையில், அங்கிருந்த படையதிகாரிகள் மேற்படி கலந்துரையாடலில் தாமதமாக கலந்து கொண்டார் என்ற குற்றச்சாட்டை அவர் மீது முன்வைத்து கருத்து எதனையும் கூறவிடாது தடுத்துள்ளனர்.

இதனையடுத்து கடற்றொழிலா ளர் சங்கச் செயலாளர் அக்கலந்து ரையாடலில் இருந்து வெளியேறி விட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை படையினரால் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆலோசித்து தீர்வு காணும் பொருட்டு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட இச்சந்திப்பில் படையினர் தமது கருத்துக்களை கேட்க மறுப்பது அவர்களின் இனவிரோதப் போக்கை வெளிக் காட்டுவதாக மீனவர் தரப்பில் ஆட்சேபம் தெரிவிக்கப்படுகிறது. (உ-4)


**ஸ்ரீசெல்வச்சந்நிதி முருகனின் அழகிய படம் வெளியீடு**

ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகனின் சப்பரத் திருவிழா அன்று சந்நிதி முருகனின் அழகிய படம் வெளியீடு செய்யப்படும். அப் படமானது தேர்த்திருவிழா அன்று விற்பனையாகவுள்ள "ஸ்ரீ முருகன் பாமாலை" யுடன் (ரூபா-50) இலவசமாக வழங்கப்படும்.

படம் பிரதியாக்கும் – விநியோகம
ஸ்ரீ வல்லிபுரா போட்டோ

ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்
புருத்தித்துறை

[C/6591]



இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.09.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.